5–11–61 | வார வெளியீடு | விலை 16 காசு

அறிவக நூல் நிலையம்
வெ: தங்கசாமி

வேண்டாமிந்தத் தேவநாகரி!

—[தியாகராசன்]—

நாகரியை நல்வாழ்வில் நுழைக்கப் பார்ப்பார்!
நந்தமிழை நாகரியால் எழுதப் பார்ப்பார்!
வேகமாக டெல்லியாரும் நுழைக்கப் பார்ப்பார்!
வெந்தழலை நம்மடியில் கட்டப் பார்ப்பார்!
ஊகமாக நீங்களிதை அறிந்து கொள்வீர்!
ஊக்கமுடனே அஞ்சாமல் எதிர்க்க வாரீர்!
நாகமாக நம்மொழிக்கு இந்தி வந்தால்
நசுக்கிவிடத் தேர்தலுமே வருமென் பீரே!

வேண்டாமல் நம்வெறுப்பைக் கொட்டிக் கொண்டார்!
வேகமாக இந்தியையும் நுழைத்து விட்டார்!
தூண்டாமல் நாமுந்தான் வெறுப்புக் கொள்ள
தூக்கிவைத்தார் பொதுலிபியை இந்தி யென்றே
மாண்டமொழி இந்தியையும் மதிக்க வந்தார்!
மாண்புமொழி தமிழையும் வெறுக்க வந்தார்!
ஆண்டமொழி ஆங்கிலத்தை நசுக்கி விட்டால்
ஆட்சிமொழியாய் இந்தியையும் ஏற்போமா? நாம்.

1793

—[ப. இளவழகன்]—

சாரட்டு வண்டியொன்று வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதனுள்ளே நன்ருக்க் குடித்திருக்கும் பிரபு ஒருவன்; சார்லோ என்னும் பெயரினன். வண்டியோட்டியைப் பார்த்து "வேகமாய் ஓட்டு" என்று அடிக்கடி அதட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அவன் நினைவு தவறவில்லை என்பது நன்ருகத் தெரிகிறது. வண்டி பிரான்சு மாநகரத்தின் வீதியொன்றை அடைந்தது.

வீதியிலே ஒரு புறத்திலுள்ள வீட்டுக் கூரையின்மீது நான்கைந்து பேர் உட்கார்ந்துகொண்டு, பிய்ந்து போன கூரையைத் திருத்திக்கொண்டிருக்கிருர்கள். சாரட்டின் சாளரத்தின் வழியாக அந்தக் காட்சியைக் கண்ட சார்லோ சீமான், திடீரென்று "வண்டியை நிறுத்து" என்று கட்டளையிட்டான். வண்டி நின்றது. தன் 'அருமைச் செல்வம்' நாயுடன் கீழே இறங்கினுன். கொக்கைச் சுடுவதுபோல் கூரைமீது இருந்தவர்களில் ஒருவனைக் குறி பார்த்துச் சுடுகிருன். குண்டு பாய்ந்தவன் "ஐயோ"வென்று அலறியபடி வீழ்கிருன். இப்படி அடுத்தடுத்து நான்கு முறை சுடுகிருன்; குறி தவருது சென்ற குண்டுகள் நான்கும், நான்கு பேரின் — குற்றமறியா அப்பேதைகளின் உயிரைக் குடித்துவிடுகிறது. வண்டியோட்டி அந்தக் கோரக் காட்சியைக் காணச் சகியாதவனுய் வேறு பக்கம் திரும்பிக்கொண்டான். அந்தச் சீமான் தன் குறி பார்க்கும் திறமைத் தேர்வை நடத்திவிட்டு, வெற்றிக் களிப்பால் வண்டிக்குள் தாவுகிருன்; அடுத்த வேட்டை எங்கோ......?

பதினுன்காம் லூயியின் ஆட்சியில், இதைக் கொடுமையான செயல் என்று கூறுவதற்கு மட்டுமல்ல; எவரேனும் எண்ணுவதாய்த் தெரிந்தால்கூட, அவன் சாவூரைச் சேர்வதற்குத் தகுதியானவன் என்று தண்டனை வழங்கப்படுவான்!

"என் இதயக் கோயிலில் இடம் பெற்றவரே! ஒரு வேண்டுகோள்... நிறைவேற்றுவீர்களா?

"மை தீட்டிய விழியாளே! மாற்றுக் குறையாத் தங்கமே! இந்த நேரத்திலே நான் மன்னனல்ல; மலர்கள் தூவியிருக்கும் இம்மஞ்சத்திற்கு அதிபதி! சதியே! வேண்டுகோள் எதற்கு? வேண்டுவதற்கெல்லாம் கட்டளையிடு; கவலை தவிர்; கடிதில் நிறைவேற்றக் காவலர் காத்து நிற்கின்றனர் கணக்கற்ருேர்! வேண்டுவதென்ன? விளக்கம் வேண்டாம்; விழியசைவு போதும்! அதற்குப் பதிலாக எனக்கு வேண்டியதெல்லாம் இந்த ஆப்பிள் நிற கன்னங்களும், கற்கண்டுச் சுவை சொட்டும் இக்கனி உதடுகளும் தான்!"

மன்னன் கூறி முடித்ததுதான் தாமதம்; மேடம் டுபாரி எழுதி வைக்கப்பட்டிருந்த ஏடொன்றை எடுத்து, கையொப்பமிட வேண்டிய இடத்தைக் காட்டுகிருள். அந்தப் பரிதாபத்திற்குரியவன்; பாவையரும் பஞ்சு மெத்தையும் சகிதமாகக் கிடந்தவன்; பதினைந்தாம் லூயி அவள் நீட்டிய ஏட்டிலே, காட்டிய இடத்தில் கையொப்பமிடுகிருன்.

*

"வெளியே இழுத்தெறியுங்கள் அந்த நாய்களை! வரி கட்ட முடியாதவர்களுக்கு வாழ்வு ஒரு கேடா!!" இரைந்தான் பௌலான் பிரபு.

"பிரபு! வரிகட்ட முடியவில்லையே தவிர, மறுக்கவில்லையே! காய்ந்திருக்கும் எங்கள் வயிற்றைப் பெருங்குடலும் சிறுகுடலும் போட்டி போட்டுக்கொண்டு பிசையும் கொடுமையை அறியாவிட்டாலும், விளைந்திருக்கும் விளைச்சலை விற்றுக்கொண்டு வரச் சற்று, அவகாசம் வேண்டுமென்பதையாவது அறியமாட்டீர்களா? அதற்குள் அவசரப்பட்டால் எப்படிக் கட்டுவது? வேதனை பொங்கும் உள்ளத்தோடு, விவசாயிகளில் ஒருவன் கேட்டான்.

"என்ன துணிச்சல்! எப்படிக் கட்டுவதென்று என்னையே கேட்கிருயா? எதிர்ப் பேச்சுப் பேசுமளவிற்கு துணிவா? இந்தப் பர்கண்டி மாகாணத்தில் நான் இட்டதே சட்டம்! எதிர்ப்பவன் எவனுனுலும் ஆக்கப்படுவான் தரைமட்டம்!!" ஆத்திரமுற்ற பௌலான் துப்பாக்கியை எடுத்து விசையைத் தட்டுகிருன்; ஆனுல், அது வெடிக்கவில்லை. முன்பே அதிலிருந்த குண்டுகள் தீர்ந்துபோய் விட்டிருப்பதால்; அப்போதைக்கு ஒரு உயிர் தப்பிப் பிழைத்தது. ஏமாற்றமடைந்த பௌலான் "இருக்கட்டும் உன்னை இன்ஞெருமுறை கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு ஏவலாளிகளைப் பார்த்து" என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்! விளைந்திருப்பவை எல்லாவற்றையும் வாரிக்கொண்டு வாருங்கள்" என ஏவுகிருன்.

ஏவலாளர்கள் ஒரு மணியைக் கூட விடாமல் எல்லா மணிகளையும் எடுத்துச் செல்வதைக் கண்டு திடுக்கிட்டுப்போன விவசாயிகளில் ஒருவன், "கொஞ்சம் உணவுப் பொருள்களையாவது கொடுத்துவிட்டுப் போங்களேன்" என்று கெஞ்சுகிருன். மற்றவர்களும் அவனைப் போலவே கெஞ்சுகின்றனர்; குழந்தைக்குட்டிகள் கதறுகின்றனர்.

"ஏன் இப்படிக் கதறுகிறீர்கள்? பிரெஞ்சு மண்ணிலே கடவுளின் கிருபையால் விளைந்திருக்கும் இந்தத் தானியங்களை எடுத்துக்கொண்டதற்காகவா? மூடர்களே! பூமியிலே விளைந்திருக்கும் எல்லாவற்றையுமா எடுத்துக்கொண்டு விட்டேன்? இல்லை; இல்லை. புண்யாத்மா நான்; புல்லை விட்டுவைத்திருக்கிறேன் புசித்துப் பசியாறுங்கள்!!"

(4-ம் பக்கம் பார்க்க)

தேசிய ஒருமைப்பாடு! (1)

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (5—11—61) தனிப்பிரதி 16 காசு [இத

இன்றைய அரசியல் பேச்சுக்களில் 'தேசிய' ஒருமைப்பாடு' என்ற பல்லவி அடிக்கடி கேட்கின்றது. நாடு விடுதலை பெற்றுப் பதினான்கு ஆண்டுகள் ஆன பிறகு எங்கே அந்த ஒருமைப்பாடு என்று இன்று தேடப் புகுந்துள்ளனர்.

வெள்ளையனை விரட்டிட அன்று நாம் ஒன்று கூடினோம்; ஒருவரானோம். நமக்குள்ளே இருந்த நானாவகையான வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் மறந்து இணைந்து நின்று செயலாற்றவேண்டிய நெருக்கடி நேர்ந்தது. ஓரூர் செல்வோர் அனைவரும் ஒரே வண்டியேறிச் செல்லுகின்றனர். செல்லவேண்டிய ஊர் வந்ததும் இறங்கி அவரவர் இல்லம் நோக்கி அவரவர் செல்வர். அப்போது அவர்களைப் பார்த்து 'ஒரே வண்டியில் வந்தோரே, ஏன் இப்போது ஒருவர்க்கு ஒரு வழி என்று பிரிந்து செல்லுகின்றீர் — எல்லாரும் ஒருவழி சென்று ஒரு வீடு அடையுங்கள்' என்று எவனேனும் சொல்லுவானோ? சொல்வோனைப் பித்தன் என்று இகழமாட்டோமா?

இன்று தேசிய ஒருமைப்பாடு என்ற பொருளற்ற பல்லவியும் இப்படித்தான் உள்ளது. தமிழனும் வங்காளியும், மராட்டியனும் மற்றவனும் வெள்ளையனால் தாழ்ந்து கிடந்த நிலையுணர்ந்து, வெள்ளையனை வெளியேற்றினால் நன்னிலை வாய்க்கும், என்றெண்ணி—அதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது தனித்தனியே இருந்து போராடுவதைவிட இணைந்து இருந்து போராடுவதே நல்லது என்று ஒன்று திரண்டனர். உலக அரசியல் நிலைமை வெள்ளையனை வெளியேறச் செய்தது.

இங்கிருந்த நமக்கு நல்வாழ்வு இனி கிடைத்தே தீரும்—பாலும் தேனும் ஆறாக ஓடாவிடினும்,—அளவாகவேனும் கிடைக்கும் என நம்பினோம். ஆனால் நடைமுறையில் கண்டதோ நேர்மாறானது. ஊற்றுப் பெருகி வழியும் எனத் தோண்டினால், சுரந்த இடம் வற்றிவிட்டால் எப்படி இருக்கும்? அதுபோல் ஆயிற்று நிலை.

விலைகள் ஏறின,

பொருள்கள் காணக்கிடைப்பதே பேறு ஆகியது

ஊழல் மலிந்தது—

அரசாங்கம் வரிக்குமே வரி விதித்தது—

ஏழை மேலும் மேலும் ஏழையானான் முன்னிருந்த நிலைக்குப் பின்வந்தநிலை மோசமாகியது—

இதனைக் கண்ட பிறகே மக்கள் மனதில் வெள்ளையன்மட்டும் நமது வளர்ச்சிக்குத் தடையல்ல—வேறு பலவும் இருக்கின்றன என்ற நினைப்பு இடம்பெற்றது. மொழியால்-பண்பால்-பழக்கவழக்கங்களால்-ஒன்றுவோர் மட்டும் ஒன்றிநின்றால் போதும்—பிறரோடு பிணைப்பு இருப்பதே முன்னேற்றத்திற்கு முட்டுப்பாடு என்று கருதினர்.

மொழிவழியாக மாநிலங்கள் பிரிந்தன.

பின்னரும் பீழை தொடர்ந்தது. பெயருக்குப் பிரிந்தோமேயன்றிச் சூத்திரக்கயிறு எங்கோ ஓரிடத்தில் இருக்கிறது. அந்த நடுமுடிச்சில் எல்லாவற்றையும் இறுக்கிப் பிணைத்திருக்கின்றனர். அங்கு இழுக்கும் இழுப்புக்கே இங்கிருக்கும் தலைகள் ஆடுகின்றன என்ற பேருண்மையை அனைவரும் அறியத் தலைப்பட்டனர்.

குறிப்பாகத் தென்னகத்தின்

மொழி,
பொருள்,
வாழ்வு

ஆகிய இம் மூன்றும் அழியத்தொடங்கின. அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விழிப்புணர்ச்சிகொண்ட மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். வீரத்தோடு முழங்கினர்.

இந்தக் குரல் திக்கெலாம் எதிரொலித்தது. உலகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் பட்டுத் திரும்பியது.

இங்கிலையில் 'தேசியஒருமைப்பாடு! எங்கே எங்கே என்று தேடப்புகுந்துள்ளனர் ஆளவந்தோர்.

நாட்டில் உள்ள கட்சிகளின் தலைவர்களை அழைத்து அதைப்பற்றி விவாதித்தனர். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்தக் கூட்டத்திற்கு அழைப்பில்லை. அவர்கள் அழைக்காததினால் கழகத்திற்கு ஒன்றும் கவலை இல்லை. ஆனால் இதிலே கவனிக்க வேண்டுவது என்னவென்றால், எதைத்தேடப் புகுந்தார்களோ, அதை முதலிலேயே இழந்துவிட்டார்கள் என்பதாகும். ஒருமைப்பாடு வேண்டுவது உண்மையான நோக்கம் என்றால் எல்லோரையும் அல்லவா அழைத்திருக்கவேண்டும். அப்போதுதானே 'ஒன்று' என்ற எண்ணம் தோன்றமுடியும்? சிலரை ஒதுக்கிவைத்து 'நாம் அனைவரும் ஒன்று' என்பது எப்படிப் பொருந்துமோ தெரியவில்லை. எனவே அவர்கள் நோக்கம் ஒருமைப்பாடு தேடுவதாக அமையவில்லை. வளர்ந்துவரும் திராவிட இன உணர்ச்சிக்கு எதிர்ப்பு அணி உருவாக்கும் முயற்சியின் முதற்படி இது என்பது தெளிவாகிறது, அல்லவா?

இதனாலெல்லாம் அழியக்கூடியது அன்று இன உணர்ச்சி என்பதை அவர்கள் உணருவார்களாயின் இப்படிப்பட்ட வெறுமைப்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுமைக் கோபுரத்தின் உச்சியில் நின்று கொக்கரித்துவிட்டுப் போகிறான்; பிரெஞ்சு மாதாவின் மண்ணிலே பிறந்துவிட்ட பேயன் பௌலான்.

"கவடு, களவு, பொருளாசை, கோபம், களியாட்டம், காம விகாரம், துஷ்டத்தனம் ஆகியவைகளைச் செய்பவர்கள் பாவிகளே! இந்தப் பாவ மூட்டைகளுடன் மெய்யூருக்குப் போகமுடியாது. எனவே பையூரிலிருந்து வந்தவர்களே! இந்தப் பொய்யூரை விட்டு மெய்யூருக்குப் போகும் வழியினைக் கூறுகிறேன்" என்று மதகுரு உபதேசத்தைத் தொடங்குகிறார்.

"நிறுத்துங்கள்!" கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழும்புகிறது. புனித ஊருக்கு வழியினைக் கூற விருந்தவர் புருவத்தை நெரித்தபடி: "நிறுத்தச் சொல்லும் நீசன் யார்? இடையே குறுக்கிடுபவர்கள் எவரானாலும் என் கோபத்தீயில் வெந்துவிடுவார்கள் என்பதை எச்சரிக்கிறேன்!" கூட்டத்திலிருந்த இளைஞனொருவன் ஏளனத்தோடு; ஆனால், ஏனோதானோவென்ற போக்கின்றிக், கேள்விக் கணைகளைத் தொடுக்கிறான் மதகுருவை நோக்கி, அவைகளில் ஒன்று:

"பாவச் செயல்களில் ஒன்றெனக் கோபத்தைக் குறித்துவிட்டு, தங்களுக்கே கோபத்தீ உண்டாகுமென்கிறீர்களே! அப்படியானால், பாவ மூட்டை சுமப்பவர்களின் பட்டியலில் நீங்களும் சேர்ந்துவிடுகின்றீர்; அப்படித்தானே?"

இதுபோன்ற பல வினாக்களை அடக்கிய அவ்விளைஞனது பேச்சு, குருவின் கோபத்தை மேலும் தூண்டுகிறது. நிலைமையைச் சமாளிக்க முயல்கிறார். இளைஞனை நோக்கி: "பாவியே! நீ செய்திருக்கும் பாவ காரியங்களை மொத்தமாய்ச் சொல்லிவிட்டு, மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு ஓடப்போகிறாயா, அல்லது சாவை நாடப்போகிறாயா?"

"சாவென்றால் சஞ்சலப்பட, இப்போது மட்டும் நாங்கள் வாழ்ந்து கொண்டா இருக்கிறோம்? காட்டைக் கழனியாக்கிக் களைபறித்து விளைச்சலை மட்டுமே கண்டோம்; வேறென்ன கண்டோம்? அங்கத்தை மறைக்க அழுக்குக் கந்தலுமின்றித் தவிக்கையிலே, நீங்கள் ஐந்தடி நீளத்தில் அங்கி தரித்து, திராட்சைப் பழரசமருந்தி இன்பத்தில் பொங்கித் திளைக்கிறீர்கள்! 'காம விகாரம், களியாட்டம் கூடாது' என்ற நல்லுரையை—போதனையைக் கூறிவிட்டு சாதனையும் சல்லாபமும் அங்கே அரசியோடு அரண்மனையிலே!" கூறிமுடிப்பதற்குள் வால்டேரின் வாடையும், ரூசோவின் கருத்து மணமும் கலந்து சொல்மாரி பொழிந்துகொண்டிருந்த அவ்விளைஞனின் வயிற்றை நோக்கி வாளொன்று பாய்கிறது. எதிர்பார்த்து வந்தவன்போல், சத்தம் சிறிதும் செய்யாமல் சாய்கிறான் தரைமீது! அவனுக்கு உதவி செய்யலாமென்றுஎண்ணியோஎன்னவோ, அவனருகே ஓடும் சிலரும் கைது செய்யப்படுகின்றனர். 'பாஸ்டிலி' யின் பசிபோக்க உயிர் வேண்டுமல்லவா?

•

மேற்கண்ட உரையாடல்கள் உண்மை கலந்த கற்பனைதான் என்றாலும், பிரெஞ்சு நாட்டு மூன்று தலைமுறைகளின் வரலாற்றில் காணப்படும் நிகழ்ச்சிகளுக்கு கொஞ்சமும் மிஞ்சியதோ, மிகைப் படுத்தப்பட்டதோ அல்ல! பதினைன்காம் லூயியின் கொடுமைச் செயல்கள்; அவனுக்குப் பக்கவாத்தியம் வாசித்தவர்களால், பாதந்தாங்கிகளால் மக்கள் அனுபவித்த இன்னல்கள் எண்ணிறந்தனவாகும்.

பதினைந்தாம் லூயி, மேடம் டுபாரியின் கைப்பொம்மையாய்த் திகழ்ந்ததின் விளைவாக, அவளுக்கு வேண்டாதவர்களுக்குச்சீட்டுக்கிழிப்பதும், வேண்டியவர்களுக்குப் பதவி தருவதும் சாதாரணமாக நிகழ்ந்தது. நூறு ரூபாய் பெறுமான விளைச்சல் கண்டால், அறுபது ரூபாய் வரிகட்ட வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் மக்கள். வரி வசூலிக்கும் உரிமை, பிரபுக்களுக்கு ஏலத்தில் வழங்கப் பட்டதென்ற செய்தி நமக்கு விந்தையாகத் தோன்றுகிறது. சிந்தையில் சிறிதும் இரக்கமின்றி வரி வசூலிக்கும் உரிமை பெற்ற சீமான்கள், மக்களின் துன்பத்தை எண்ணினாரில்லை. அதிகாரம் — கொடுமை ஆகிய உருளைகளுக்கிடையில் மக்களைத் தள்ளி, வடியும் வரிப்பானத்தைக் குடித்துக் கும்மாளமிட்டனர். குடிக்கக் கஞ்சியின்றித் தோலாடை போர்த்திய எலும்புக் கூடுகளாக ஒரு சாரார் தவித்துக்கொண்டிருக்கையில், தாங்கள் மட்டும் பன்னீரில் கையலம்பி, பட்டாடையில் வாய் துடைத்து, பஞ்சு மெத்தையில், கொஞ்சுமொழிக் கோதையரோடு கூடிக் களித்துக்கொண்டிருந்தனர்.

உணவுப்பொருள்களின் விலை மக்களின் வருவாய்க்குக் கொஞ்சமும் பொருந்தியதாக இல்லை. ரொட்டி கிடைப்பதே அரிதாகவும், கிடைத்தாலும் வாங்கமுடியாத அளவுக்கு நாளுக்கு நாள் விலை கூடுவதையும் கண்ட மக்கள், மன்னனிடம் சென்று விலையைக் குறைக்குமாறு கோரிக்கையொன்றை எழுப்பினராம். பதினாறும் லூயியின் பத்தினி பகன்ற பதிலாம் இது: "ரொட்டி கிடைக்கவில்லையென்றால் 'கேக்' சாப்பிடுங்களேன்!" எப்படியிருக்கிறது பதில்? 'கஞ்சி கிடைக்காவிட்டால் பாயாசம் பருகுங்களேன்' என்பதைப்போல! அந்த அளவிற்கு அவர்கள் மக்களின் வாழ்க்கை முறைகளை உணர ஆற்றலற்று, 'காட்டாட்சி தர்பார்' நடத்திக் கொண்டிருந்தார்கள்.

பிரபுக்களின் பேயாட்டம்; மதகுருமார்களின் மமதை, அரசனது ஆணவ ஆட்சி ஆகிய அத்தனைக்கும் அதிர்ச்சி தந்து அலறி ஓட வைத்த ஆண்டு 1793. பிரான்சு மக்கள் ஆண்டாண்டு காலமாய் அனுபவித்த அல்லல்களைப் போக்கத் துணிந்து, புரட்சிக் கொடி உயர்த்தி, முடியாட்சியை முடங்கச் செய்த ஆண்டு 1793. அந்த ஆண்டின் நிகழ்ச்சி, வரலாற்று ஏட்டிலே பதித்துவைக்கப்பட்டுள்ள ஒரு விறுவிறுப்பான பகுதி மட்டுமல்ல; வையகத்தில் வாழும் கொடுமையின் பிம்பங்கள், சுயநலக் கயவர்கள், வரட்டுத் தத்துவவாதிகள் ஆகிய அத்தனை பேருக்கும் தக்கதோர் பாடமும் கூட!

"சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவது தான் அரசாங்கத்தின் நோக்கம்" என்ற அரசியல் வித்தகன் அரிஸ்டாட்டிலின் தத்துவத்தை மறந்தோ, அல்லது மறுத்தோ அவனது கருத்துக்கு நேர்முரணாய் நடந்துவரும் எந்த அரசாங்கமும் வெற்றிபெற முடியாது. 'பாஸ்டிலி' சிறையில் அடைக்கப்படுவதால், படுகொலைகள் செய்வதால், தேவையான நல் உரிமைகளுக்குத் தடை விதிப்பதால் எந்தவொரு மக்கள் இயக்கமும் தளர்ந்துவிடாது. பிரான்சின் 18-ம் நூற்றாண்டின் வரலாறுகூறும் மேற்கண்ட உண்மைகளை, இங்கேயும் உணரும் நாள் அண்மையில்! மிக அண்மையில்!!

★


காஞ்சீபுரம்
5-11-'61.
தம்பி!
உள்ள வலிவு மேற்கொண்டுள்ள வேலைக்குப் போதுமானதாக இல்லையே என்ற
கவலை என்னைக் குடைந்தவண்ணமிருக்கிறது-வயது ஆக ஆக இப்படித்தான் எண்ணம்
எழும் என்று வாலிப, முறுக்குடனுள்ளவர்கள் பேசுவர்; புன்னகை புரிவர்; உண்மையி
லேயே செய்து முடித்தாகவேண்டிய எல்லா அலுவல்களையும் செம்மையாகச் செய்திடத்
தேவைப்படும் உடல் வலிவு இல்லை என்று கவலைப்படுகிறேன்; உள்ளம் எதையும்
தாங்கிக்கொள்கிறது; ஏசல்களை, இழிமொழிகளை, பழிச்சொற்களை எல்லாவற்றையும்;
பழகிப்போய்விட்டது; ஏன் சிலர் அதுபோலப் பேசிவருகிறார்கள் என்பது
புரிந்துவிட்டிருப்பதால், வருத்தம் ஏற்படுவதுமில்லை; திடுக்கிட்டுப்போவது
மில்லை. எவரெவர் என்றால், தமது ஆதிக்கம், சுயநலம், சதித்திட்டம்,
தகர்க்கப்படுகிறது என்று எண்ணிக்கொள்கிறார்களோ, அவர்களெல்லாம்
ஆத்திரப்படுவதும், தூற்றித்திரிவதும், எதிர்பார்க்கப்படவேண்டியது
தானே! அதிலும் இது தேர்தல் நேரம்! நரகல் நடைக்கு ஏகப்பட்ட
'கிராக்கி' அல்லவா!! அதனைக் கொட்டிக்காட்டி, 'எடு கட்டணம்' என்று
கேட்டு வாங்கும் காரியத்திலே பலர் ஈடுபடுகிறார்கள். பெரிய பெரிய
திட்டங்களைப்பற்றித், தனித்தன்மை வாய்ந்த தத்துவங்களைப்பற்றி, மக்கள் மனதிலே
மூண்டுகிடக்கும் முடைநாற்றமடிக்கும் மதியீனங்கள் பற்றியெல்லாம் பேசி, அறிவுத்
தெளிவு அளிக்கவேண்டியவர்களெல்லாம், இன்று அவை அத்தனையையும் மூட்டை
கட்டித் தூக்கித் தூர வைத்துவிட்டு, தம்பி! உன் அண்ணனைப்பற்றியே பேசிக்கொண்
டிருக்கவேண்டி நேரிட்டுவிட்டதே, கவனித்தனையா!! பரிதாபமாகக்கூட இருக்கிற
தல்லவா!! அவ்வளவு பெரியவர்களின் இன்றைய அலுவல், உன் அண்ணனைத் தூற்றித்
திரிவது என்றாகிவிட்டது. ஏன், தம்பி! விளங்கவில்லையா? உன் ஆற்றல்மிக்க உழைப்
பினால் உருவாகிவிட்டுள்ள சக்தி, அவர்களின் கண்களை அவ்வளவு உறுத்துகிறது;
கருத்தைக் கலக்கிவிட்டிருக்கிறது. இந்தச் சக்தியை, எப்பாடுபட்டேனும், எந்த முறை
யைக் கையாண்டேனும், எவருடன் கூடிக்கொண்டேனும், அழித்தாகவேண்டும் என்ற
எண்ணம், தீயாகி அவர்களின் நெஞ்சினைத் தகிக்கிறது. துவக்கத்திலே அவர்களுக்குக்
கூச்சமாக இருந்தது; நமது நிலை என்ன? ஆற்றலென்ன? இந்தப்பயல், பொடியன்!
இவனை எதிர்க்கவா, நாம் நமது நிலையைவிட்டுக் கீழே இறங்கிவருவது! சே! கூடாது!
கூடாது! நமது ஆற்றல், அவனியுளோர் மெச்சிடத்தக்க அருங் கருத்துகளைப் பரப்பிட
வன்றோ பயன்படுதல்வேண்டும், இந்த 'ஏனோதானோ'வைத் தாக்கவா!-என்று எண்ணிக்
கொண்டிருந்தனர். நமது அறிவாற்றல், தாக்கும் திறமை, புட்டுப் புட்டுக் காட்டும்
வல்லமை, ஓட ஓட விரட்டும் துணிவு, இவை, கைலாயம் வைகுந்தம், இவைகளைக் கதி
தொழுதூர் வந்தோம்!
பொழுது விடிந்தது!!

கலங்கச் செய்யவேண்டும் — செய்து வருகிறது! —புத்தரும் ஏசுவும் செய்யத் துணியாததை, சாக்ரடீசின் கருத்துக்கு எட்டாததை, நாம் உலகுக்கு எடுத்தளிக்க வல்லமை பெற்றுள்ளோம். நமது வாழ்நாளில், ஜாதியை ஒழிப்போம், மதத்தை அழிப்போம்! மற்றதுகள் ஜாதிபேதத்தை ஒழிப்போம், மத ஊழல்களை அழிப்போம் என்று மட்டுமே பேசுகின்றன; நாம் அப்படி அல்ல; ஜாதியை மதத்தை அடியோடு அழிப்போம்; அதற்கே நமது அறிவாற்றல்! அதற்கே நேரம், நினைப்பு!!—என்றெல்லாம் எண்ணிப் பணியாற்றிவந்தனர். பாவம்! அவர்களெல்லாம் இன்று, தி. மு. கழகத்தின் வளர்ச்சியை அழித்தால் போதும்; பிறவி எடுத்ததன் பயன் அஃதே! என்று, கூச்சத்தைவிட்டுக் கூறிக்கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர். தி. மு. கழக வளர்ச்சி, அத்துணை வேகமும் வடிவமும் கொண்டுவிட்டது; எங்கும், எதிலும் எப்போதும், தி. மு. கழக வளர்ச்சிதான் தெரிகிறது. எனவே பலர், இன்று, தி. மு. கழகத்தைத் தகர்க்க, என்னைத் தாக்குகிறார்கள். இது எனக்குப் புரிவதால், நான் ஆத்திரமோ, வருத்தமோ அடைவதில்லை! சில வேளைகளில், சிலர், மிகத் தரக்குறைவான முறைகளைக் கையாண்டு தீரவேண்டி வருகிறதே என்று பரிதாபமாகக்கூட இருக்கிறது. 'தோடி' பாடினால் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கலாமா என்று தோன்றும், அவ்வளவு இனிமை அத்துணை தரம் இருக்கும் என்று பல்லோரும் புகழ வாழ்ந்துவந்த இசைவாணன், குரல் கெட்டு, நோய்வாய்ப்பட்டு, ஈளைகட்டி இருமிக்கிடக்கும்போது, என்ன தோன்றும்! தோடிபாடிக் கேட்போரை களிப்புக் கடலில் ஆழ்த்தியவரின் நிலை, இன்று இப்படி ஆகிவிட்டதே என்றெண்ணி இரக்கம் காட்டச் செய்யும். வேளைக்கு இரண்டுபடி தந்துகொண்டிருந்த பசு, வத்தலாகித் தொத்தலாகி, அடிமாட்டு மந்தையிலே இடம் பெற்றிடக்கண்டால், என்ன தோன்றும்! இடிந்த மாளிகை, இரசம் போன கண்ணாடி, ஊசல் பண்டம், உடைந்தவாள், பிரிந்துபோன கூடை, திரிந்த பால்—இவைகள், ஏளனம் அல்ல, தம்பி! இரக்கத்தை எழுப்பத்தக்க பொருட்கள், காலத்தாலும் கருத்தற்ற போக்காலும், கயவர் கரம் பட்டதாலும், வகையும் வடிவமும் கெட்டதற்குச் சான்றுகள். தம்பி! இதைக் கவனித்தனையோ, இல்லையோ!

குரல்கெட்ட பிறகுதான், கும்பலில் குரலெழுப்பி, கொடுத்ததைக் கொடு என்று கேட்டுப் பெறுவார், இசைவாணனாக இருந்தவர்!

முனை உடைந்த பிறகு, வாள் மாற்றானை மாய்க்க அல்ல, மரப்பட்டையை பெயர்க்கப் பயன்படுத்தப் படுகிறது.

ஊசல் பண்டம், குப்பைமேடு செல்கிறது! அங்கும் அதற்கு ஏகப்பட்ட கிராக்கி! காக்கைகள்! கோழிகள்! பூச்சிப் புழுக்கள்! குக்கல்! பன்றி!—இவைகளுக்கெல்லாம் பெருவிருந்தன்றோ. ஊசாமல், உள்ளே இருந்த போது, மனையில் உள்ளோருக்கு விருந்து! ஊசியபிறகு? விருந்துதான், வேறு வகையினருக்கு!!

அதனால்தான் தம்பி! என்ன ஏமாற்றம் ஏற்பட்டாலும், எதிர்ப்புகள் குறுக்கிட்டாலும், சலிப்பு புகுந்து குடைந்தாலும், அவசரம் ஆத்திரத்தை மூட்டினாலும், கொண்டகொள்கையைக் குலைத்துக்கொள்ளக்கூடாது, உரிய நோக்கத்தை உருக்குலையவிடக் கூடாது, ஊசல் பண்டமாகக்கூடாது, முனை ஒடிந்தவாளாக, திரிந்த பாலாக ஆகக் கூடாது என்று, நான் அடிக்கடி, நமது தோழர்களுக்கு வலியுறுத்திக் கூறி வருகிறேன்.

ஒவ்வொரு நாளும் நான் இந்த உறுதியுடன் பணியாற்றிக், கழகத்துக்கு ஏற்றத்தைத் தேடித்தரும் எண்ணற்ற தோழர்களைக் காணுகிறேன்; மகிழ்ச்சி பெறுகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கைப் படகை நடாத்திச் செல்வதிலே, எத்துணையோ இன்னல்களைக் காண்கின்றனர்; எனினும், கழக வளர்ச்சிக்காக உழைக்கத் தவறுவதில்லை; கண்ணுங்கருத்துமாகப் பாடுபடுகின்றனர். பட்டிதொட்டி ஒன்றுகூட விட்டு வைக்கவில்லை; எல்லா இடங்களிலும், கழகக் கொள்கை இடம் பெறச் செய்து வருகின்றனர். இதனை நான், தம்பி! விருத்தாசலம், நல்லூர், வளவனூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் இரண்டு நாட்கள் சென்றபோது கண்டு பெருமிதம் கொண்டேன். நம்புகிறார்களோ இல்லையோ, தம்பி! மாலை 7 மணிக்குத் துவங்கிய, சுற்றுப்பயணம், விடியற்காலை 5-30க்கு முடிவுற்றது. இருபது கூட்டங்கள்; சிற்றூர், பேரூர்; ஊராட்சிமன்ற வரவேற்புகள்; கிளைக்கழகத் துவக்க விழாக்கள், கொடியேற்று விழா ஊர்வலக் கோலாகலங்கள், இப்படித் தொடர்ந்து நடைபெற்றது. திட்டக்குடியில் மிகப் பெரிய கூட்டம்! நேரம், இரவு இரண்டு!! திட்டக்குடி தவிர, மற்ற இடங்களெல்லாம் சிற்றூர்கள்—அரசியலுக்கும் நமக்கும் என்ன தொடர்பு, அது பட்டினங்களிலுள்ள படித்த சிலருக்குப் பொழுதுபோக்கு, என்று எண்ணிக்கொண்டிருந்த கிராமத்து மக்களெல்லாம் நள்ளிரவுக்குப் பிறகும், விழித்திருந்து விழாக் கோலம் காட்டி, வரவேற்று வாழ்த்தளித்து, அரசியல் கருத்துக்களை மிக உன்னிப்பாகக் கேட்கிறார்கள்! பொருள் விளங்குகிறதா, தம்பி! போகமுடியாத இடம்! புக முடியாத இடம்! என்றெல்லாம், ஆளுங்கட்சியினர் கூறிக்கொண்டிருந்தனரே அந்தக் கிராமப்புறங்கள், இன்று கழகக் கழனிகளாக மாறிக்கொண்டு வருகின்றன. ஊரின் பெரிய குடியின் பேச்சுத்தான், கட்டளை

என்று இருந்துவந்த இடங்களிலெல்லாம் இன்று, உலக நிலை, ஊராள் முறை, மக்களாட்சியின் மாண்பு என் பவைகள்பற்றிய தெளிவும், மக்களாட்சியை மாண் புடையதாக்கியாகவேண்டும் என்ற உறுதிப்பாடும் மிகுந்து காணப்படுகிறது. பதப்படுத்துவதிலும், முறைப்படுத்துவதிலும், நாம் வெற்றி பெற்றோமென் ருல், தேர்தலில் நமது கழகம் ஏற்றமிக்கதோர் நிலை பெறும் என்பதிலே ஐயமில்லை. கதிர் முற்றி இருக் கிறது! விளைந்த காட்டுக் குருவிகள் வட்டமிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். வழி? விழிப்போடிருப் பதுதான்! கழகத் தோழர்கள் தமக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், கட்டுச்சோற்று மூட்டையுடன், கிராமம் சென்று, குளத்தங்கரை அமர்ந்து உணவுண்டான பிறகு, களத்துமேடும் கழனிப்பக்கமும், தெருக்கோடி யும் சாவடியும், மரத்தடியும் மதகடியும் உலாவி, உரை யாடி, கழகப்பணி புரியலாம்—இன்றுமுதலே! நிலைமை அவ்வளவு பக்குவமாக உளது. நாட்டு நிலை அறிய, கிராமத்து உழைப்பாளிகள் அத்துணை ஆர்வத்தோடு உள்ளனர்.

இதனைக் கண்டு பெருமிதம்கொண்டு, ஒவ்வோர் இடத்து நிகழ்ச்சியினையும் வேக வேகமாக முடித்துக் கொண்டு, தம்பி! நண்பர்கள் செல்வராஜ், பிச்சமுத்து, கோவிந்தசாமி, மற்றும் கழகக் காவலர்கள் பலருடன், தொழுதூர் சென்ருேம். நேரம் என்ன? தம்பி! தொழுதூர் வந்தோம்! பொழுது விடிந்தது!! கோழிகள் கூவின! காக்கைகள் கரைந்தன! புள்ளினம் சிறகடித் துக் கிளம்பின! உழவர்கள், வயல் நோக்கி நடந்தனர்! தாய்மார்கள் கூட்டி மெழுகலாயினர். விளக்கொளி, மங்கலாக! ஒலிபெருக்கி, குரலெழுப்பாமல்! ஊராட்சி மன்றத்தார் உறக்கம் துறந்து, மேடையில்! இந்நிலை யில், நாங்கள் அங்கு சென்ருேம்.

இரவு முழுவதும் எதிர்பார்த்தவண்ணம் இருந்திருக் கின்றனர்.

விடியும்போதுகூட, விளக்கை அணைத்துவிட்டு, வீடுபோய்ப் படுப்போம் என்று அவர்கள் எண்ண வில்லை. எப்படியும் வந்துவிடுவார்கள் என்று எதிர் பார்த்தபடி, வரவேற்பு ஏற்பாடுகளுடன் இருந்தனர். என்னென்பேன் அவர்களின் உள்ளன்பை. நேரம் ஆகஆக, ஏமாற்றம் எரிச்சலை அல்லவா மூட்டிவிடும்; இவர்களோ நல்லவர்கள், நமது நிலைமையை நன்கு உணர்ந்தவர்கள், எனவே எரிச்சல் கொள்ளவில்லை, ஏக்கம் கொண்டிருந்தனர்.

சென்ருேம்! ஒலிபெருக்கி மூலம், இசை! அங்கும் இங்கும், மக்கள் நடமாட்டம்! பரபரப்பு! நானே அவர் களிடம், சிறப்பான முறையில் மற்ருேர் நாள் நிகழ்ச் சியை வைத்துக்கொள்ளலாம் என்று கூறி, ஆறுத லளித்து, பொறுத்தருளும்படி கேட்டுக்கொண்டு, வரவேற்பு இதழைப் பெற்றுக்கொண்டு விடை பெற்றுக் கொண்டேன் — காலை மணி ஆறு, தம்பி! ஆமாம்! அதற்குப் பிறகுதான், உணவு!! இரவு சாப்பாடும் காலை சிற்றுண்டியும் சேர்த்து! நெடுஞ்சாலையில்! மோடாரில் இருந்தபடி! தம்பி! இந்தவிதமான உணர்ச்சிப்பெருக் கினை, உள்ளன்பினைப் பார்க்கும்போது, ஊரே திரண்டு நம் பக்கம் நிற்கிறது என்று தோன்றுகிறது; தேனென இனிக்கும் எண்ணம்கொள்கிருேம். ஆனால், காங்கிரஸ் காரரோ, வெள்ளித் தோட்டாக்களைக் காட்டுகின்றனர் நம்மை மிரட்ட; காங்கிரசுக்குக் கிடைத்துள்ள புதுப் புது வகையான ஆதரவாளர்களோ, தூற்றல் பாணம் தொடுத்தே நம்மைத் துளைத்துவிடுவதாகக் கூறுகின் றனர். சில வேளைகளிலே நமது தோழர்களிலே சில ருக்கு, பணம் போதுமான அளவு இல்லையே, ஏழை எளியவர்களை, கடைசி நேரத்திலே பணம்கொடுத்து, படியவைத்துவிடுவார்களோ' என்ற பயமும் பிடித்துக் கொள்கிறது.

மக்களின் அரசியல் தெளிவு நாளுக்குநாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதிலேயும், நமது கழகக் கொள்கைக்காக, எதையும் இழக்கும் உறுதியுடன் பணியாற்றுவோரின் தொகையும் வளர்ந்த வண்ண மிருக்கிறது என்பதிலேயும் அசைக்கமுடியாத நம் பிக்கைகொண்டால், நம்மிலே எவருக்கும், தேர்தல் முடிவுகள்பற்றியோ, விளைவுகள் குறித்தோ அச்சம் ஏற் படக் காரணம் இல்லை.

தேர்தலில் ஈடுபடுவது, ஒரு அரசியல் கட்சியின் தலையாய கடமை.

கொள்கை பரப்பவும், கேடான முறைகளைக் கண் டிக்கவும், ஆதிக்கம்கொண்டு இறுமாந்துகிடக்கும் கட்சி யின் இடுப்பை முறிக்கவும், மக்களாட்சி முறையினை மாண்புடையதாக்கவும், தேர்தல், ஒரு நல்ல வாய்ப் பினைத் தருகிறது.

மேலும், காங்கிரசுக்குப் பல்வேறு வகையான 'வலி வுகள்' இருப்பினும், 'எதிர்ப்பு' அலட்சியப்படுத்த முடி யாத அளவிலும் தரத்திலும் வளர்ந்திருப்பது மிக நன் ருகத் தெரிகிறது; மேலுக்குச் சில காங்கிரஸ் தலைவர் கள், தி. மு. கழகம்பற்றி அலட்சியம் காட்டுவது போலப் பேசுகிருர்களேயொழிய, உள்ளூர அவர்கள், அச்சம்பிடித்தலையும் நிலையில்தான் உள்ளனர்; அமைச் சர்களின் சுற்றுப்பயணமும், ஆள்பிடிக்கும் படலமும், பணம் திரட்டும் போக்கும், தூற்றல் பிரசாரமும், கழகத் திலிருந்து சிதறியவைகளைத் தூக்கிவைத்துக்கொள் வதும், துதிபாடுவதுமாக உள்ள போக்கும், வேறு எதைக் காட்டுகிறது!

எல்லா எதிர்க்கட்சிகளும் கூடிக் கூட்டணிஅமைத் தாலும் எங்களை என்னசெய்துவிடமுடியும்? என்று வீராவேசமும் பேசுகிறார்கள்; அதேபோது ஒன்றுக் கொன்று முரண்பட்ட கொள்கைகள்கொண்ட கட்சி கள், 'கூட்டு' சேரலாமா? என்றும் கேட்கிறார்கள்; கேர ளத்தில், 'கூட்டு' இருப்பதுபற்றி வாய்மூடிக்கிடக் கிறார்கள்.

தி. மு. கழகத்தார் ஒரு ஐந்துபேர் வெற்றிபெறக் கூடும் என்று 'ஆரூடம்' கணிக்கிறார், அமைச்சர் சுப்ர மணியம்; ஆனால் அவருடைய ஆரூடம் எவ்வளவு அபத்தமானது என்பது அவருக்கே தெரியுமாதலால், அலைகிறார், திரிகிறார், ஆர்ப்பரிக்கிறார், அறைகூவுகிறார், மிரட்டுகிறார் உருட்டுகிறார், நாள்தவருமல் ஊரூர் சென்று.

ஐந்துபேர்களே வெற்றிபெறக்கூடும் என்று கூறத் தக்க அளவுக்குத்தான், தி. மு. கழக வளர்ச்சி, செல் வாக்கு இருக்கிறது என்றால், இந்த அசகாயச்சூரர் ஏன் இப்படி அலையவேண்டும்! பழுது என்று கூறிவிட்டு தடி எடுத்து ஓடுபவர்பற்றி என்ன எண்ணுவீர்கள்? வெண் ணெய் வெட்ட வாள் தேடுபவரை, என்ன பெயரிட் டழைப்பது!

தானாக எதிர்ப்பதுமட்டுமல்ல, எத்தனை எத்தனை 'இரவல்படை' தேடிப்பெறுகிறார்கள்; அதற்காக என் னென்னவற்றை, பாவம், இழக்கிறார்கள் பார்த்தனையா, தம்பி!

கம்யூனிஸ்டுகளைக் கண்டால் கள்ளக்கும்பிடுகள் போட்டு, இந்தியாவைத் துண்டாட விரும்புவோருடன் கூட்டா, சேச்சே! இது என்ன அறிவீனம்!—என்று பேசுவது எதற்காக? முடிந்தால், கம்யூனிஸ்டுகளை நம் மீது ஏவிவிட!!

கழகத்தைவிட்டுப் பிரியும் பேர்வழிகளுக்கு, வர வேற்பு, உபசாரம்! விலகியவர், வீரர், விவேகி!! ஆமாம்! அவருடைய சபலத்தைத் தூண்டிவிட்டு, பேசவைப் பது, ஏசச்சொல்லிக்கேட்டு இன்புறுவது.

எல்லாவற்றையும்விட இன்று கரை சேர்க்கவைப் பவர், ஈடேற்றவந்தவர், வழிபடத்தக்கவர், பெரியார், என்ற நிலை பிறந்திருக்கிறது.

ஆயிரம் திட்டட்டும், என்னையும் உன்னையும், பொருட்படுத்தத் தேவையில்லை; பெரியார், இன்று காங் கிரசைப் பழிவாங்குகிறாரே, அதைப் பார்க்கும்போது, தம்பி! உள்ளபடி எனக்கு அளவிடமுடியாத களிப்பு.

அமைச்சர்கள் ஆலவட்டம் எடுத்துக்கொண்டு வருகிறார்கள், சுற்ற! அர்ச்சிக்கிறார்கள்! காங்கிரஸ் தலை வர்களே கதிநீயே பெரியோய்! கடும்புயல் வீசும் வேளை யில் காப்பாற்றிடுவாய்!! என்று அலறிக் கூவுகிறார்கள் அடிபணிந்து கிடக்கிறார்கள்.

நகராட்சிகள் வரவேற்கின்றன! மண்டலக் காங் கிரசு மண்டியிடுகிறது! காங்கிரசு வேட்பாளர்கள் வெண்சாமரம் வீசுகிறார்கள்! பெரியார் இன்று பெற் றுள்ள செல்வாக்கான நிலையில், ஒருநாள், காங்கிரஸ் தலைவர்கள் பூட்டப்பட்ட 'இரதத்தில்' அவர் உலாவரப் போகிறார் என்று தோன்றுகிறது.

முடிசூடா மன்னரே! முத்தமிழின் காவலரே! பேரறி வாளரே! பெம்மானே! பெரியோய்! பிழை பொறுத்திடுக! வழி அமைத்திடுக! என்று போற்றித் திரு அகவல்பாடு கின்றனர்.

எந்தப் பெரியாரை, நாத்திகர் என்றும், துவேஷ புத்திக்காரரென்றும், பித்தர் என்றும் நாடு கடத்தபட வேண்டியவரென்றும், முஸ்லீமின் கைக்கூலி என்றும் வெள்ளையரின் அடிவருடி என்றும், விளங்காத கொள் கையைக் கூறிக் காசுபறிப்போரென்றும், ஏசினரோ, அவரைத் தம்பி! இன்று அதே காங்கிரஸ் தலைவர்கள், புகழ்வதும் போற்றுவதும், பொன்னுடை போர்த்து வதும், போர்க்குணத்தை வாழ்த்துவதும், புனிதரே! பூஜ்யரே என்று அர்ச்சிப்பதும் காண்கிறோம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாக்குத் தழும் பேற நிந்தித்த காங்கிரசார், இந்த நாலு ஆண்டுகளில், பெரியாரை நத்திப்பிழைத்தால்தான் வாழ்வு உண்டு என்று உணர்ந்துகொண்டு, காலடி வீழ்ந்து கன்னத் தில் போட்டுக்கொண்டு, காப்பாற்றச் சொல்லிக் கெஞ் சிக் கூத்தாடி நிற்கிறார்கள்.

கண்கொள்ளாக் காட்சி! பெரியாரின் பேராற்ற லுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டு! உள்ளூர எண் ணிச் சிரிக்கிறார் பெரியார், "பயல்களே! பூமிக்கும் ஆகாயத்துக்குமாகத் தாவித் தாவிக் குதித்தீர்களே! என்னை ஒழித்துவிடுவதாக உறுமிக் கிடந்தீர்களே! உலகம் போகிற போக்கு எனக்குத் தெரியாது என்று ஏளனம் பேசினீர்களே! ஊராள வந்துவிட்டதனாலேயே, உங்களை யாரும் எதுவும் செய்யமுடியாது என்று இறு மாந்து கிடந்தீர்களே! என்னை இளித்தவாயுடையோன் என்று ஏசினீர்கள்! என் வயதுக்கும் உழைப்புக்கும், ஆற்றலுக்கும் அனுபவத்துக்கும்கூட மதிப்பளிக்க மறுத்தீர்கள்! நான் இந்த நாட்டிலே இருக்கவே தகுதி யில்லை என்று வடநாட்டான் நேரு வாய்த்துடுக்குத்தன மாகப் பேசினான்; கைதட்டி வரவேற்றீர்கள்!! கோட்டை யிலே கொலுவிருக்கிறோம் என்ற கர்வத்தில், எனக்கு மூட்டை தூக்கிகளாக இருந்தவனெல்லாம், கொக்கரித்

தான்! எவன் இருக்கிறன் எதிர்க்க! என்று இறுமாந்து கிடந்தீர்கள்! பார்த்தீர்களா, இப்போது? நான்கூட அல்ல; என் படையிலே ஒரு பிரிவு, தி. மு. கழகம், உங்களைப் பலமாக எதிர்த்து, 'பவுசு' போகும் நிலையை ஏற்படுத்திவிட்டதை!! அதுகளை அடக்க ஒடுக்க முடிகிறதா? பேந்தப் பேந்த விழிக்கிறீர்கள்! பேச வாயில்லை! சட்டியில், மா இல்லை!! என்ன செய்தீர்கள்? கடைசியில், என் காலடி வீழ்ந்தீர்கள்! வேறு கதி? போகட்டும், 'அதுகளைவிட இதுகள்' மேல் என்ற முறையிலே உங்களைக் காப்பாற்றித் தொலைக்கிறேன். கெஞ்சுகிறீர்கள்! கொஞ்சுகிறீர்கள்! என்ன வேண்டும்? எது வேண்டும்? என்று சோடசோபசாரம் செய்கிறீர்கள்! உங்களுடைய மந்திரிகளுக்குக்கூடக்கிடைக்காத் மரியாதை எனக்குக் கிடைக்கிறது! மந்திரிகளேதான் மண்டியிடுகிருர்களே!! படம் திற என்கிறீர்கள்; பல்லக்குச் சுமக்க வருகிறீர்கள்! பல்லிளித்துக் கிடக்கிறீர்கள், பராக்குக்கூறி நிற்கிறீர்கள்! பழிதீர்த்துக்கொள்ளும் படலம்!! பாடம் புகட்டும் படலம்!

இந்த நாடு துளியாவது எதிர்பார்த்ததா? தீப்பொறி பறக்க என்னை ஏசியவர்கள், இன்று தீவட்டி தூக்கிகள் ஆவார்கள் என்று!! பொறிபறக்கப் பேசியவர்கள் இன்று போக்கிடமத்ததுகள் ஆவர் என்று! பெரியார், விவரம் தெரியாதவர் என்று எண்ணிக்கிடந்தீர்களே—புரிகிறதா என் போக்கு! நாற்பது ஆண்டுகளாக, உமது கட்சியை நையப் புடைத்தேன் — உங்க காந்தியை ரோய ரோயப் பேசினேன் — உங்கள் திட்டங்களைக் கண்டித்து வெளுத்துவாங்கினேன்—என்ன நடந்தது இறுதியில்? தாவிக் குதித்தீர்கள்! தாக்கிப்பார்த்தீர்கள்! தர்பாரில் இடம் கிடைத்ததால் என்னைத் தரைமட்டமாக்கிவிடலாம் என்று மனப்பால் குடித்தீர்கள்! ஆனல், என்னைவிட்டுத் தனியானவர்கள், கொடுத்தது பலமாகிவிடவே, ஓடோடி வந்தீர்கள் என் காலடி விழ! போகட்டும், அந்தப் பயல்கள் வளரக்கூடாது என்ற எண்ணத்தில், வந்து தொலையுங்கள் என்று, உங்களை ஏற்றுக் கொண்டேன். என்னென்ன இழிமொழி கூறினீர்கள் என்னைப்பற்றி! எத்தனை கூட்டங்களைக் கலைத்தீர்கள்! இப்போது, என் கூட்டத்துக்கு நோட்டீஸ் ஒட்ட, ஏணி தூக்கிகளானீர்கள்!! மேடையில் துணி விரிப்பது நீங்கள், கொடியைப் பறக்கவிடுவது என் திராவிட கழகம்! மாலைகள் கொடுப்பது மண்டலங்கள், எண்ணிப் பார்ப்பது என் கழகம்!! என்ன கதியில் கொண்டுவந்து விட்டேன், உங்களை!

ஒரு பஞ்சாயத்துக்கூட என் கழகத்திடம் இல்லை; பார்லிமெண்டே எங்களிடம் என்று பேசுகிறீர்கள்; இருந்து? பல்லிளிக்கிறீர்களே என்னிடம் வந்து!

முதலிலே முடுக்காகச் சற்றுத் தொலைவாகவே இருந்து-பார்த்தீர்கள்—காமராஜர் மட்டும் நெருங்கட்டும், நாம் போகக்கூடாது என்று. பிறகு? ஒவ்வொன்ருக, கோணி நாணி, என் எதிரே வந்து நின்று, எங்க பெரியார் என்று தோத்திரம் செய்கிறீர்கள்!

தம்பி! இப்படியெல்லாம் எண்ணுமலா இருப்பார் பெரியார்; காங்கிரஸ் தலைவர்களுக்கும் இது தெரியாமலா இருக்கும். ஆனல், தெரிந்து? என்ன செய்ய முடியும்! இன்று காங்கிரசுக்கு வளர்ந்துவிட்டுள்ள எதிர்ப்புணர்ச்சியில், பெரியாரின் எதிர்ப்பும் சேர்ந்து விட்டால், காங்கிரசின் கதி, அதோகதிதானே! அதனல் தான், பெரியாரின் துணை கிடைத்தது கண்டு, அப்பா! பிழைத்தோம்! என்று ஆறுதல் அடைகிருர்கள்.

இத்தனைக்கும் இப்போது பெரியார் காங்கிரஸ் கட்சியை சிலாக்கியமான கட்சி என்று ஏற்றுக்கொள்கிருரா? இல்லை! காமராஜர் நல்லவர், வல்லவர், நம்மவர்! —என்கிருர்! காங்கிரசை அல்ல! கதர், மூடத்தனம் தான், இப்போதும்! கைராட்டை? காட்டுமிராண்டிக் கருவி! ஆதாரக்கல்வி? பைத்தியக்காரத்தனம்! காந்தீயம்? முட்டாள்தனம்!! தேசீயம்? பித்தலாட்டம்! தியாகம்? தெகிடுதத்தம்! மதம்? போதை! பார்ப்பனர்? பகைவர்கள்! வடக்கு? முரட்டுப்பேர்வழிகள் உள்ள இடம்! நேரு? அவசரக்காரர், அறிவற்ற பேர்வழி! பெரிய மனுஷன் பிள்ளை!

தம்பி! பெரியார் இக்கருத்துக்களை மாற்றிக் கொள்ளவுமில்லை; மறந்துவிடவுமில்லை; விட்டுவிடவுமில்லை; மாருக அழுத்தந்திருத்தமாகப் பேசுகிருர்;

இராமன்? அயோக்கியசிகாமணிதான்! சீதை? சோரம்போனவள்! தசரதன்? சுத்தக் கோழை! விபீஷனன்? காட்டிக்கொடுத்த துரோகி! இராவணன்? வீரன், திராவிடன்! சுப்பன்? இரண்டுபெண்டாட்டிக்காரன், சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவன். கணபதி? அழுக்கு உருண்டை! பரமசிவன்? சுடுகாட்டுப் பேர்வழி! கிருஷ்ணன்? திருடன், சாமுகன்!!

தம்பி! இந்தப் பேச்சையும், பெரியார் மாற்றிக் கொள்ளவில்லை. மாருகப் புட்டுப் புட்டுக் காட்டுகிருர்; புது ஆசையாலே அவரைப் புடைசூழ் நிற்கும் காங்கிரசார், காது குடையக் குடைய!

முன்பு, இராமாயணத்தை ஒரு வார்த்தை கண்டித்தால், என்ன தாவு தாவுவார்கள் இந்தக் காங்கிரசார்! இப்போது? முகத்தைச் சுளித்துக்கொண்டால்கூட, முடிவில் 'ஓட்டு' போடச் சொல்லாமல் பேச்சை முடித்துவிட்டால் என்ன செய்வதென்று, காது கொடுத்துக் கேட்கிருர்கள்; கழகத் தோழர்கள் கைதட்டும்போது

கூடச் சேர்ந்து தட்டுகிறுர்கள்; தட்டாவிட்டால், கழகத்தார் கவனித்துவிட்டுப் பெரியாரிடம் சொல்லிவிட, அவர் காமராஜரிடம் சொல்ல, காமராஜர் கடுங்கோபம் கொண்டால் என்ன செய்வது என்ற திகில்! பெரியாரின் கடைக்கண் பார்வைக்காக, காங்கிரஸ் தலைவர்கள், தவமிருக்கும் கோலம் இன்று!!

நாற்பது ஆண்டுகளாகக் காங்கிரசுக்காகவே பணியாற்றிச் சொத்து இழந்து சுகம் இழந்து சிறை சென்று சீரழிந்து கிடக்கும் எந்தக் காங்கிரஸ் தலைவருக்கும், கிடைக்காத மதிப்பு, தரப்படாத உபசாரம், வரவேற்பு பெரியாருக்கு! காரணம்? பெரியார், தி. மு. கழகத்தைத் தாக்குகிறுர்!! அதற்காகக் காங்கிரசார், தங்கள் 'தேசிய' தன்மானத்தையே, அவர் காலடி வைத்து, விடுகிறுர்கள். இன்னும் ஒரு அரைமணி நேரம், தி. மு. கழகத்தைத் தாக்குங்கள் என்று வேண்டி நிற்கிறுர்கள்.

தம்பி! பெரியார் தாக்குவதால், மிதித்துத் துவைப்பதால், தி. மு. கழகம் அழிந்துவிடும் என்றுல், காங்கிரஸ் கட்சி அல்லவா இதற்கு முன்பே அழிந்து குழைந்து கூழாகிப் போயிருக்கவேண்டும்; அவ்வளவு மிதி மிதித்தாரே பெரியார்! அவ்வளவு தாக்கி இருக்கிறுரே! நம்மைத் தாக்கும் போதாகிலும், ஒரு வேளை இல்லாவிட்டால் மற்றோர் வேளை, "அந்தப் பயல்கள் சின்னப்பயல்கள்; அவர்களை இவ்வளவு அதிகமாகப் பொருட்படுத்தக்கூடாது" என்று தோன்றக்கூடும். காங்கிரசை அவர் எதிர்த்தபோதோ, முடுக்கும் முறுக்கும் மிகுந்திருந்த நேரம்—ஒழிக்காமல் ஓயமாட்டேன் உறங்கமாட்டேன் என்று 'சபதம்' கூறிச் சமர் நடத்திய நேரம்! மிதிமிதி என்று மிதித்தும் காங்கிரஸ், அழிந்துவிடவில்லை. இருக்கிறது! காங்கிரசின் அரசியல் நிலைமை இன்று பாதிக்கப்பட்டிருப்பதும், அவருடைய எதிர்ப்பினுல் அல்ல; அவர் தேர்தல் காரியத்தை நிறுத்திக்கொண்டு ஆண்டு பல ஆகிவிட்டன; காங்கிரசின் அரசியல் ஆதிக்கத்தைத் தேர்தல் களத்திலே இறங்கி எதிர்த்து, அதனை இளைக்க வைப்பது, களைக்கச் செய்வது, திராவிட முன்னேற்றக் கழகம்—பெரியார் அல்ல!

எனவே, பெரியாரின் எதிர்ப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்கும் நோக்குடன்தான் நடத்தப்படுகிறது என்றுலும், உள்ளபடி, அது காங்கிரசின் கர்வபங்கமாகத்தான் ஆகிறது என்பதை, அரசியல் நுண்ணறிவு உள்ள எவரும் உணராமலிருக்க முடியாது. பல காங்கிரஸ் தலைவர்கள் உள்ளூர வெட்கப்படுகிறுர்கள்; ஆனுல் என்ன செய்வது?' ஆசை வெட்கமறியாதல்லவா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடைவிடாத கட்டுப்பாடான எதிர்ப்புத்தான், தமிழ் நாட்டுக் காங்கிரசை, பெரியாரின் காலடி விழச் செய்தது என்பதை, இரு சாராரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்றுலும், உண்மை அதுதான் என்பதை காங்கிரசார் உணர்ந்துதான் இருக்கிறுர்கள். உணர்ந்து? ஊராள ஆசை இருக்கிறதே! பெரியாரின் துணையையும் இழந்துவிட்டால், என்ன ஆவது நிலைமை? எனவேதான் முடி நம் தலையில் இருக்க, பெரியாரின் அடிபணிந்தாகவேண்டும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள்.

தம்பி! நாடெங்கும் உன் உழைப்பினுல் கிளம்பியுள்ள புயல், காங்கிரசை, இந்தப் பாதுகாப்புத் தேடிட வைத்திருக்கிறது.

காங்கிரசுக்கு இன்று கிடைத்துள்ள பாதுகாவலர்கள், துணைவர்கள், தோழர்கள், காங்கிரசின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல! பெரிய பாதுகாவலராகப் பணிபுரியும் பெரியாரோ, அந்தக் கொள்கைகளையே, கோமாளித்தனம் என்று கூறினவர்; கூறி வருகிறவர்.

காங்கிரஸ் கட்சி வகுப்பு வாதத்தை அடியோடு வெறுக்கிறது; இடமளிக்காது என்று காங்கிரஸ் அறிக்கைகள் கூறுகின்றன. பெரியார், தெளிவாக, ஒளிவு மறைவுஇன்றி, நான் காங்கிரசை ஆதரிப்பது ஏன்என்றுல், இன்று பார்ப்பனர்கள் காங்கிரசில் முக்கியமானவர்களாக இல்லை; எல்லா இடத்திலும் பார்ப்பனரல்லாதார்தான்! ஆகவேதான் ஆதரிக்கிறேன்!! — என்று பேசுகிறுர். மறுக்கும் துணிவு உண்டா? காமராசருக்கு! காங்கிரஸ் தலைவர்களுக்கு? மண்டலங்களுக்கு? அதுதான் கிடையாது! முடியாது! மறுத்தால், பெரியாரின் பேராதரவு கிடைக்காது!! கிடைக்காவிட்டால், காங்கிரசுக்கு ஊராளும் நிலை கிடைக்காது! ஊராளும் நிலை கிடைக்காவிட்டால், பிறகு காங்கிரசில் இன்று உள்ளவர்களிலே நூற்றுக்கு எண்பது பேர், வெளியேறி விடுவர்!!

காங்கிரசின் வீழ்ச்சிக்கு, வேறு எந்த ஆதாரமும் தேடத் தேவையில்லை — பெரியாரின் பாதார விந்தத்தில் அதன் தலைபட்டவண்ணம் இருக்கும் காட்சி ஒன்று போதும்.

மற்றோர் ஆதாரம் — காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிக்கு—இன்று அதிலே உள்ளவர்களின், முன்பின் தொடர்புகள், முறைகள், கொள்கைகள். காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டியாரே கூறுகிறுர், "கண்டவர்களெல்லாம் காங்கிரசில் சேர்ந்துவிட்டனர்—கதராடை போர்த்துக்கொண்டு, சுயநல வேட்டையாட! அதனுல் காங்கிரசின் மாண்பு மங்கிவிட்டது, மதிப்பு மடிந்துவிட்டது" என்று.

ஏன் சேர்த்துக்கொண்டார்கள், கண்டவர்களை! சஞ்சீவியார், பதில் கூறினாரில்லை! கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்கள், போலிகள், சுரண்டல்காரர், இவர்களைக் கண்டறிந்து வெளியேற்ற முயற்சி நடந்ததா? இல்லை! ஏன்? ஆள்வேண்டுமே, தேர்தலுக்கு!!

எனவே, கண்டவர்களைச் சேர்த்துக்கொண்டாகிலும், தேர்தலில் வெற்றிபெற்று, ஆளுங்கட்சியாக ஆகித் தீரவேண்டும்; இல்லையேல், காங்கிரஸ் மேலும் கரைந்தே போய்விடும் என்று கிலிபிடித்தாட்டுகிறது காங்கிரஸ் மேலிடத்தை.

இது காங்கிரஸ் கட்சியின் வீழச்சியைக் காட்டும் மற்றோர் ஆதாரமாகும்.

இவை எல்லாவற்றையும் விட, பதினான்காண்டுகளுக்குப் பிறகு, ஆட்சி நடத்தும் காங்கிரஸ் கட்சி நாட்டைச் சுற்றிப்பார்த்து, தேசிய ஒற்றுமை ஏற்படவில்லையே என்று அறிந்து, வருந்துகிறது; தேசிய ஒருமைப்பாடு மாநாடு நடத்தியும், பிரிவினைச் சக்திகளை ஒடுக்கியும், ஆடல்பாடல் மூலம் ஒற்றுமையைக் காணவும், மொழி, வாழ்க்கை வழி, உடை உணவுமூலம், ஒருமைப்பாடு தேடவும், முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

தேசியத்தின் சின்னம் என்றனர் காங்கிரசை.

காங்கிரசாட்சி, தேசிய ஆட்சி என்று தெரிவித்தனர்.

பதினான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, தேசிய ஒருமைப்பாடு இல்லை என்று அறிவிக்கிறார்கள்.

இது வெட்கப்படவேண்டிய தோல்வி என்பதைக் காங்கிரஸ் தலைவர்களில் சிலரேகூட ஒப்புக்கொள்கிறார்கள்.

ஆகவே தம்பி! பெரியாரின் பாதத்தைத் தாங்கிப் பிடித்து ஆதரவு பெற்றால்தான் பதவி பெறமுடியும் என்ற பரிதாபத்துக்குரிய நிலையும், காங்கிரசின் மாண்பை மதிப்பை மடியச்செய்பவர்களைக்கூடச் சேர்த்துக்கொண்டுதான் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்ற கேவலமும், ஆண்டு அறுபதுக்குமேலாகப்பாடிய தேசியகீதமும், பதினான்கு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் தேசிய ஆட்சியும், தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவில்லை என்று தேசியத் தலைவர்கள் என்ற பட்டம் பெற்றுள்ளவர்களே அறிவித்திருக்கும் வெட்கக்கேடான நிலைமையும், காங்கிரஸ் கட்சி அதனுடைய 'உயிர்ப்பை' இழந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது.

பொழுதுவிடியும் நேரத்திலும் தொழுதூரில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தை நடத்த மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றால், இந்த நிலைமையை உணர்ந்துவிட்டிருப்பதுதான், காரணம்.

தேசிய ஒருமைப்பாடு குறித்துக் கூறவேண்டுமல்லவா—கூறுகிறேன், தம்பி! ஆனால் அதற்குமுன், ஒரு விசித்திரமான பிராணியைக் காட்டுகிறேன், பார்க்கிறாயா? மனக்கண்ணால்தான்!

யானை அளவு பெரிது! சிங்கத்துக்குள்ளபிடரி! புலி போலப் பாயும் சக்தி! நரிக்கு உள்ள தந்திரபுத்தி! குயிலுக்குள்ள குரலினிமை! மயிலுக்கு உள்ள தோகை, ஆடல்! மாடப்புறுவுக்கு உள்ள குலுக்கு! முயல்போன்றவேகம்! மீன்போன்று நீந்தும் சக்தி! சிட்டுப்போலப் பறக்கும் ஆற்றல்! கிளி, நிறம்!!

மறுபடியும் ஒருமுறை படித்து, உருவத்தை மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்திப், பார்த்துக்கொண்டிரு; அடுத்த கிழமை, சந்திப்போம்.

அண்ணன்,

அண்ணாதுரை

மண விலங்கு

கரந்தை-கணேசன்

அமுதன் அவர்களின் முன்னே அன்று வந்த முடங்கல்கள் பரவிக் கிடந்தன. அவர் அவைகளில் ஒன்றைக்கூடக் கவனியாதவராக எதிரே கிடந்த அஞ்சல் அட்டை ஒன்றை மட்டும் கவனித்தவராக அமர்ந்திருந்தார். சற்று நேரத்திற்குப் பிறகு எடுத்துப் படித்தார். எடுக்கும்போதும், படிக்கும்போதும் ஏற்பட்ட முகபாவங்களிலிருந்து அவர் அந்த அட்டையைப் பலமுறை படித்துவிட்டவராக இருக்கும் என்று எளிதில் யாரும் கண்டுவிடலாம். அத்தனை நெற்றிச் சுருக்கங்கள் நெளிந்தபடி இருந்தன. கண்கள் விரிந்து விழிக் கோளத்தின் முழு உருவையும் காட்டிற்று. மெல்லப் புன்னகை புரிந்தவராக, படித்து முடித்த அஞ்சல் அட்டையைப் பிடித்திருந்த விரல்களால் ஆட்டியபடியே,

'என்ன இருந்தாலும் அறம் வளர்த்தான் அதிசூரன்தானப்பா— துணிந்து யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் சாதித்துக் காட்டிவிட்டானே! வாழ்க மணமக்கள்! வாழ்க! வாழ்க! என்று மகிழ்ச்சி மேலீட்டால் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துதல்களோடு முடித்தார்.

மீண்டும் அதே அஞ்சல் அட்டையைப் பார்த்தார். அவர் மனம் படிக்க மறுத்தது. இதயத்தின் மறுப்பை எடுத்துக் காட்டுவது போல் பிடித்திருந்த விரல்கள் அட்டையை மீண்டும் ஆட்டியபடி இருந்தன.

சில சமயங்களில் மனதுக்குப் பிடித்தமான காரியங்கள் நிகழ்ந்துவிடுகிறபொழுது, அதிலும் தன்னால் சாதிக்க முடியாததைத் தன்னைச் சார்ந்தவர்கள் சாதித்துக் காட்டும்பொழுது, உரிமைநிறைந்த நெஞ்சங்களிலே ஏற்படுகின்ற பெருமை இருக்கிறதே, அது விநோதமானதுதான். இல்லாவிட்டால் தன் மழலைக் குழந்தையின் சிறு சிறு அசைவுகட்குக்கூடப் பொருள் கற்பித்துக்கொண்டு அவற்றைத் தங்களின் சொந்தச் சாதனைகளாகக் கருதிக் களிப்பார்களா தாய்மார்கள். அமுதனும் இப்பொழுது தாயின் நிலையிலேதானிருந்தார். அறம் வளர்த்தான் செய்து காட்டிய ஒரு சிறு செயலைத் தன் சொந்தச் சாதனையாகக் கருதிக் களிக்கும் மனத்திற்கு, தாயின் மனத்தைத் தவிர வேறு எதுவும் உவமை சொல்வதற்கில்லை. அவ்வளவு மகிழ்ந்து கிடந்தது அவர் மனம்.

அந்த மகிழ்ச்சி வேகத்திலேதான் அவர் அவனால் அனுப்பப்பட்ட அச்சடித்த அந்த முடங்கலை மூச்சைப் பிடித்துக்கொண்டு பசித்தவன் பாயசம் பருகுவதுபோல பத்தாவது தடவையாகப் படித்து முடித்திருந்தார். நண்பர்களின் கடிதமும் காவியமும் ஒன்றுதான் என்று பட்டது அவருக்கு.

கடிதத்தில் அப்படியொன்றும் பிறர் கண்டு பெரு வியப்படையத்தக்க செய்தி இல்லை. அவர் தன் இன்னுயிரையையும் ஈங்தேனும் தன் நாட்டின் விடுதலையைத் தேடிப் பெறத் தயாரா? என்று கேட்டிருந்தாரே; அதற்கு அவனின் தயார்! தயார்!' என்று விடையா? இல்லை. விடுதலை இயக்கத்துக்கு மேலும் ஒரு புதிய கிளையைத் துவக்கப் போகிறேன் என்று எழுதி இருந்தானே அதற்கான அன்பழைப்பா? இல்லை. எதாவது ஒரு போராட்டத்திற்கு— ஏன் மொழி காக்கும் தன்மானப் போராட்டத்திற்கு...அதுவும் இல்லை. இவைகட்கெல்லாம் அவன் ஏங்கிக் கிடப்பவன்தான். ஆனாலும்—

இக்கடிதம் அவைகள்பற்றியல்ல- இது அழைப்பு மடலே அல்ல—அறிவிப்பு மடல். அறிவிப்புத்தான் என்றாலும், புதுமையான அறிவிப்பு.

கரத்திலே இருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. அவர் கனமும் கழற்றி விடப்பட்ட புகை வண்டிப் பெட்டி தனியே பின்னோக்கி ஓடுவது போலக் கடந்துபோன பழைய நிகழ்ச்சிகளாகிய தண்டாவாளத்திலே ஓடியது.

அவருடைய திருமணம். எவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெற்றது. கோலாகலமாக நடைபெற்ற அந்த மண நிகழ்ச்சிகளை இப்பொழுது நினைத்துக்கொண்டால் கூட அவர் மனத் திரையிலே அப்படியே தென்படும் அக்காட்சிகள்; எவ்வளவு இன்பம் நிறைந்தவை? அந்தக் காட்சிகள் எப்பொழுமே பசுமையாகத் தன் மனத்தில் இருக்க வேண்டும் என்பதனாலோ என்னவோ, அவர் அடிக்கடி தன் மனத்திலே திரையோட்டி விடுவார். நிகழ்ச்சிகள் கடந்தவைகள் என்றாலும், புதிய தெம்பையும், புத்துணர்ச்சிகளையும் ஊட்டத் தவறுவதில்லை. அதிலும் மனத்திரையிலே ஓட்டிப் பார்ப்பதற்குத் தரைடிக்கட்டிற்கு ஆகும் செலவுகூடத் தேவையில்லையே!

அவர் மனமே அரங்கம், அதுவே படம் ஓட்டி, அதுவே பார்வையாளர், உரிமையாளர் எல்லாம். இடையிலே படச்சுருளில் 'வெட்டு' என்

பதற்கே வேலையில்லை. எல்லாவற்றிற்கு மேலாகத் தணிக்கைக்கு குழுவின் பார்வை என்ற பேச்சுக்கே இடமில்லையே! இந்தச் சிந்தனை அலைகள் எழுந்ததும் மனதும் ஒருவகையில் திரையரங்குதான் என்பது அவருக் குப்பட்டது.

அவர் வீட்டில் தன் ஒரே மகனுக்குத் திருமணம் என்றவுடன் அதனை எப்பாடுபட்டாவது, எந்த விலை கொடுத்தாவது விமரிசையாக நடாத்தித் தீரவேண்டும் என்று துடித்தார். மணவினை என்பது மறுபடியும் எதிர்பார்த்தே தீரவேண்டிய ஒன்று என்று எவருமே எதிர்பார்ப்பதில்லையல்லவா?

அமுதனே வீட்டாருக்கு மேல் துடியாகத் துடித்தார். மனம்போல மாங்கல்யம் என்பதற்கேற்பச் சீரும், சிறப்பும்மிக்க முறையில்சீர்திருத்தத் திருமணமாகவே நடந்தேறியது.

திருமணத்தன்று எவ்வளவு பெரிய கூட்டம். இல்லம் நிறைந்து எழில் கொட்டியது. அத்தனை பெரிய கூட்டத்திற்கு இடையே, தான் மணமகன் என்ற முறையில் அமர்ந்திருப்பது என்னவோ கூச்சமாக இருந்தாலும், பெரிதும் இன்பமாகவேபட்டது. இதைத்தான் இன்பவேதனை என்பார்களோ என்றது அவர் உள்ளம்.

திருமணத்திலே எதிலே குறை? யாரும் கூறியதாக அவருக்கு எட்டவே இல்லை. எல்லாம் நிறைநாதமாகவே இருந்தது என்றனர் பலர். அத்தனை பெரிய கூட்டத்திலும் மணப்பெண்ணை ஓரக்கண்ணாலாவது ஒருதடவை பார்த்துவிடவேண்டும் என்று அவர் எடுத்த முயற்சிகள், எண்ணச் சுழல்கள்... இந்த அமுதனா அன்று அப்படித் தத்தளித்தான் என்று எண்ணும்பொழுது, அவரின் இதழ்களிலே இளநகை இழைந்தோடியது.

இவர் மணப்பெண்ணைப் பார்க்கத் துடிக்கிறார் என்று அறிந்துதானோ என்னவோ, மணவிழாவுக்குத் தலைமையேற்றிருந்த அந்தப் பொன்னு உள்ளம் பொடி வைத்துப்பேசி எல்லோரையும் சிரிப்பிலே ஆழ்த்திய தோடுமல்லாமல், அவர்கள் இருவரின் 'கண்ணும் கண்ணும் கலந்து' நிற்க, அவரும் அதையே கூறி நிற்க, மேலும் புதிய சிரிப்பலைகள் எழுந்து மணவிழா மேலும் மேலும் மகிழ்ச்சி நிறைவிழாவாக ஆகி நின்றது.

என்னதான் அப்படிச் சொன்னார்? 'மணவாளன் அமுதன் அவர்கள் மங்கை நல்லாள் மனோன்மணியை இதுவரை பார்க்கவில்லை என்று எண்ணுகிறேன்' கூட்டத்தில் சிரிப்பு சிரிப்புக்கிடையே, 'இதுபோதாவது பார்ப்பார் என்று எண்ணுகிறேன்' மீண்டும் சிரிப்பு. அப்பொழுது பார்த்தே தீரவேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டார். பார்க்க முயற்சி எடுக்கும்போதே... 'அதற்கென்ன அவ்வளவு பெரிய முயற்சியா தேவை?' என்று மணமாகாத இளைஞர்கட்குக் கேட்கத்தோன்றும். கேட்பது என்னவோ எளிதுதான். அமுதனுருக்கு அந்த நிலையில் ஒரு பெரிய பாறையைத் தனியே உருட்டிப் புரட்டுவது போன்ற சிரமமும் சங்கடமும் தோன்றிற்று. பாறையைப் புரட்டுவது போன்ற அந்தத் தீரத்திலே அவர் ஈடுபட்டிருக்கும்போதே மேலும் தலைவரின் பேச்சுத் தொடர்ந்தது.

'ஏனென்றால் தமிழரின் மணமுறையே காதல்மண முறையல்லவா... என்னுடைய முன்னுரை முடிவதற்குள் களவும் முடிந்துவிடும் என்று எண்ணுகிறேன்' மீண்டும் சிரிப்புத்தானே!

அதற்குள் அமுதனும் பாறையைப் புரட்டிவிட்டார். தலைவரும் முடித்தார்.

'கண்ணும் கண்ணும் கலந்துவிட்டது, நமது கடமையும் தொடங்கிவிட்டது. இனி மன்றம் அறிய மணம்தான்' என்றார். சிரிப்பு அலைகள் ஒரு தொடர்கதையின் பல அத்தியாயங்களானதில் வியப்பதற்கில்லையல்லவா!

குறுகுறுத்த மனம், இன்பக்கனவுகள் காணும் இதயம், உணர்ச்சிகளின் உச்சத்திலே உறவாடும் உடல், பயிற்சிக்காகத் துடிக்கும் இளமை, பக்கத்திலே பசிக்கேற்ற பக்குவமான பாலமுது, இவைகள் யாவும் உனக்கே சொந்தம் என்று கூறி, 'சுகமாக வாழ்க! வாழ்க!' என்று வாழ்த்தும் பல்லோர். இத்தனைக்கும் இடையில் அவருக்கு உலகத்து இன்பங்கள் யாவும் ஒன்று திரண்டு வந்து ஒருங்குதாண்டவமிடுவதுபோன்று பட்டது. தற்போதெல்லாம் அத்தகு நிகழ்ச்சிகள் பலவும் நினைக்க நினைக்க இதயத்திற்கு இதமான ஒத்தடம் போன்றிருந்தது அவருக்கு. அதன் சுகத்திலே நேரத்தைக் கழித்துக்கொண்டே இருந்துவிடலாம் போன்று பல தடவை அவர் கருதியதுண்டு.

தலைவரின் முடிவுரைக்குப்பின் அமுதன்தான் என்ன குறைவாகவா பேசினர்.

"நீங்கள் ஏடுகளில் பார்த்திருப்பீர்கள் மிகப்பெரிய இடத்துத் திருமணங்களில் எல்லாம் அந்த அமைச்சர் வந்திருந்தார்; வாழ்த்துரை வழங்கினார், பிரமுகர்கள் இன்னார் இன்னார் வாழ்த்திச் சென்றனர் என்றெல்லாம். என்னுடைய திருமணத்திற்கு அப்படியாரும் அமைச்சர்களோ பிரமுகர்களோ வரவில்லைதான். ஆனாலும் ஒன்றுமட்டும்தெளிவாகச் சொல்வேன், என்னுடைய திருமணத்திற்கு வருங்காலத் திராவிடத்தின் அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள் — அடிமைத் திராவிடத்தினுடைய அல்ல! விடுதலை காணத் துடிக்கும் தீரமிக்க வீரத் தம்பிமார்கள் திரள்திரளாகத் திரண்டு தன் சகோதரனை வாழ்த்துகிறார்கள் — தீரம் இழந்தல்ல. எதை எண்ணுகிறேன். எது சிறந்தது என்று கணிக்கிறேன், நீங்களே சொல்வீர்கள் எதிர்காலம்! எதிர்காலம்! என்று இனி எனக்கு இதைவிடச் சிறப்பு என்ன தேவை? எதுவுமில்லை. எதுவும் இருக்கமுடியாது. எனது அழைப்புக்கிணங்கி அருள்கூர்ந்து வந்திருந்து சிறப்பித்த உங்கள் அனைவர்க்கும் எனது நன்றி! மன்னிக்கவும்—இதுநாள்வரை ஒருமையிலே இருந்த நான் அதே பழக்கத்தில் எனது என்று கூறிவிட்டேன். எங்களின் இதயங்கனிந்த நன்றி அனைவர்க்கும். வணக்கம்!

ஆனாலும் அதிலும் விட்டாரா தலைவர். மெல்ல எழுந்து நகைத்தபடியே, 'மணமகன் சொன்ன ஒருமையிலும் தவறில்லை. இனி அவர்கள் இருவருமே ஒருமனதாயினர் தோழி...! தானே' என்றார். கூட்டம் கைதட்டித்தீர்த்துவிட்டது களிப்போடு களிப்பாக, சிரிப்போடு சிரிப்பாக.

சிந்தனை என்பது பறவையைப் போன்றது, எண்ணங்களாகிய இறகுகள் ஓயுமட்டும் அது ஒரு இடத்தில் நிற்பதே இல்லை. அதிலும் இதயத்திற்கு இதமான மென்மையான இனிமை பயக்கும் நிகழ்ச்சிகளே மெதுவாக வீசும் காற்றைப் போல் தொடரத் தொடங்கிவிட்டால் போதும் அதன் பயணம் துரித வண்டியைப்போன்றதுதான். இந்த மனவண்டி நிற்கவேண்டும் என்றால், இடையில் ஏதாவது ஒரு பெரிய நிலையம் குறுக்கிட்டுப் புகைவண்டியை நிறுத்துவதுபோல் இதையும் ஏதாவது ஒரு பெரிய நிகழ்ச்சி குறுக்கிட்டாகவேண்டும்.

அமுதனாரின் மன வண்டியும் அப்படித்தான் நின்றுபோனது. வான வீதியிலே பறந்து மேலே மேலே போய்க்கொண்டிருந்தவன் திடீரென்று மண்நோக்கிக் கீழே கீழே

வந்து மண்ணிலேயும் விழுந்துவிட்டால்!! அமுதன் அவர்களின் மனமும் அப்படித்தான் துடித்தது.

மலரின் அழகைக் கண்டு அதிலே மயங்கி அதனை எதிரே இருந்து காண்பதைவிட, அருகே சென்று அதனைக் கிள்ளியெடுத்து முகர்ந்து பார்த்துவிடவேண்டும் என்று துடிக்கும் பலருக்கு, அம்மலரைச் சுற்றி முட்களும், முட்கள்கூடவேகிடக்கிற மணமும் அழகும் கொண்ட அம்மலருக்குள்ளே பூநாகமும் இருக்கக்கூடும் என்பது புரிவதில்லையே!

பொது விழாவுக்கு வரும் மக்களும் செல்வந்தனுக்கு வரும் செல்வமும் வேலைமுடிந்தவுடன் விருவிருவென்று வெளியேறிவிடுவதுபோல, அவருடைய திருமணத்திற்கு வந்திருந்த கூட்டமும் கலைந்துபோயிற்று. ஓரிருவர் மட்டும் நெருங்கிய உறவினர்கள் என்ற முறையில் இரண்டொரு நாள் இருந்துவிட்டு அவர்களும் வெளியேறிவிட்டார்கள். மணமான நான்காவது நாள், மணவினையின் சிறப்புப்பற்றித் தாய் தந்தையர்களோடு களிப்பாகப் பேசிக்கொண்டிருக்கும், போது தந்தையார் ஒரு வெடிகுண்டை எடுத்துப் போட்டார். திருமணத்திற்கான மொத்தச் செலவு ரூபாய் இரண்டாயிரம். அத்தனையும் கடன்—வீட்டின்பெயரில்.

அமுதனுக்கு இதைக் கேட்டவுடன் மலைபோல வளர்ந்திருந்த ஆசைப் பொதியின்மேல் நெருப்பு விழுந்ததுபோன்றதாயிற்று, இரண்டாயிரம் ரூபாய் மளமளவென்று இரண்டே நாட்களில் நீரிலே கரைத்துவிட்ட சர்க்கரையைப் போல் கரைந்துவிட்டதே! சர்க்கரையையாவது நீரைக்காய்ச்சி ஒன்றுக்குப் பாதியாகவாவது பெற்றுவிடலாம். ஆனால் செலவழிந்துபோன பணத்தை எதைக் காய்ச்சிப் பெறுவது? உழைப்பு...... உழைப்பு...... உழைப்பு என்கிற சூட்டைக் கொண்டு உடலைக்காய்ச்சிக் கடனை அடைத்துத் தீரவேண்டும். உழைப்பதா? இப்பொழுதுதென்ன உழைக்காமலா இருக்கிறோம்? சாதாரண ஏழை ஆசிரியன் இதற்கு மேலும் எப்படி உழைத்து எப்படிக் கடனை அடைப்பது? வரும் ஊதியமே தந்தை, தாய், தான் அத்தோடு தற்போது சீரோடும், சிறப்போடும் வாழ வைப்போம் என்ற நம்பிக்கையோடு வாழ வந்திருக்கும் துணைவி ஆக நான்கு உயிர்களின் பராமரிப்புக்கே போதாது. திருமணம் என்றவுடனே துள்ளிக் குதித்தது மனம்... இன்றோ அதே திருமணம்?

மனிதன் வளர வளர அவன் தேவைகளும் அவனைக் கேட்காமலே வளர்ந்தபடியே இருக்கின்றன. அதனால் அவன் தன்னை வளர்த்துக் கொள்ளப்படும்பாடு— நடாத்தும் போர்! இந்தப் போரின் விளைவுதான் அவன் உழைப்பு மிகவும் எளிமையான விலைக்குப்போய் உழைப்புக்கேற்ற ஊதியம் என்பதுகூட மறுக்கப்பட்டுப் பிழைப்புக்கேற்ற ஊதியம் என்ற நிலை நிலவுகிறது. இந்த நிலையில் தங்கம் தகரவிலைக்குப் போகத்தானே செய்யும். 'சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற ஊதியம்' என்ற தத்துவம் துளிர்த்துத் திளைத்தது எங்கே? அப்படியானால் அந்தத் தத்துவம் சுவை தரும் சொல்லடுக்குத்தானா? இல்லை... இல்லை... நடைமுறைக்குரியதுதான். ஆனால், அந்த நடைமுறை வெற்றிபெறப் பலரிடம் தேவையான தீரமும், சிலரிடம் தூய்மையான தியாகமும் தேவை. இல்லாமலா ஏழை சிலபல இடங்களில் சிரித்து வாழ்கிறான்.

விழித்துக்கொண்ட தன்னுடைய புரட்சி மனத்தை அடக்கினார் அமுதன். திசைமாறிப்போனதாக இருந்தாலும் தொடர்பானதுதான் என்று எண்ணினார்.

'நமது திருமணத்தினால் இரண்டாயிரம் கடன் — அதனை நாம்தான் சம்பாதித்து அடைக்கவேண்டும்' இந்தச் சொற்களை மனைவி மனோன்மணி கேட்டால், அவள் மனம் என்ன பாடுபடும்! சேச்சே......திருமணத்தில் கடன்—அதை அடைக்க வாழ்வு கருதி வந்தவளும் வதைபட வேண்டும். என்ன கண்மூடித்தனமான வேடிக்கை நடந்துவிட்டது? இந்த எண்ணம் திருமணத்திற்கு முன் இருந்திருந்தால்?

திருமணத்திற்கு முன்...?

புகழும், ஆசையும் அளவுமீறிவிட்டால், எந்த மனிதனும் அணைகடந்த வெள்ளம்தானே! அதனால் விளையும் பாதகங்களைப்பற்றிய கவலை அப்பொழுது எப்படி இருக்கமுடியும்?

பூப்போல மனைவியை வைத்திருக்கவேண்டும் என்றுதான் நானும் எண்ணினேன். எண்ணி என்ன செய்வது? பெரும் முட்கள் நிறைந்த காட்டைக் கடந்தால்போதும் என்றல்லவா ஆகிவிட்டது. கடன்—வட்டி—ஊதியம் — உழைப்பு — பிழைப்பு — இப்படியே சுற்றித்திரிந்தது அவர்மனம். வாழ்வதெங்கே?— மணவிலங்கை மாட்டிக்கொண்டு.

பின்னர் என்ன செய்வது. 'நாய்க்கு வாழ்க்கைப்பட்டால் குலைத்துத்தான் ஆகவேண்டும்' என்ற நிலையில் இந்த இரண்டரை வருடமாக அவர் ஊதியத்தில் கால்பகுதியை அதற்கே கரைத்துவருகிறார்.

இந்த நிலையில்தான அறமவளர்த்தானின் அந்த அச்சிட்ட கடிதம் வந்தது அவர் முன்னே கிடந்தது. படித்தார்—மணம்தான்—திருமணம் தான். ஆனால்......

மீண்டும் அந்த அஞ்சல் அட்டையை எடுத்தார்—படித்தார்.

திருமணவிழாத் தெரிவிப்பு மடல்

அன்புடையீர்! வணக்கம்.

நாளது வள்ளுவர் ஆண்டு...நாள் காலை பத்துமணியளவில் எங்கள் திருமணம் சென்னை மாவட்டத் தலைமைப் பதிவாளர்....அவர்களால் பதிவு மனையில் வாழ்க்கை ஒப்பந்தமாகப் பதிவுசெய்யப்பட்டுச் சிறப்புற நடைபெற்றது - என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளை எங்கட்கு வழங்க வேண்டுகின்றோம்.

அன்புள்ள,

சென்னை | அறம்வளர்த்தான்
.... | அங்கயற்கண்ணி

படித்துமுடித்தவுடன், 'நானும்தான் இருக்கிறேன் இரண்டரை ஆண்டுகளாகியும் திருமணம் என்பது மனிதன் தனக்குத்தானே தீர்த்துக்கொள்ளும் விலங்கு என்ற தத்துவத்திற்கு உயிர்கொடுத்துக் கொண்டு, என்று அலுத்துக் கொண்டார்.

மேசைமீதுகிடந்த மற்றக் கடிதங்களையும் புரட்டினார். அறம்வளர்த்தான் உள்நாட்டு உறையில் எழுதி அஞ்சல் ஒன்றும் வந்திருந்தது. ஆவல்மீற அதை எடுத்துப்படித்தார். தன்னுடைய திருமணச் சூழ்நிலைகள் யாவையும் எழுதி, இறுதியில் அமுதன் அவர்கள் திருமணத்திற்காகப் பட்டகடன், அது இன்னும் அடைபடாமை இவைகள்தான் தன்னை விழிக்கச்செய்தது, என்று கூறி அக்கடன் உங்கட்கு உபாதையாக இருந்தாலும் எனக்கு நல்வழிகாட்டிற்று என்றும் குறித்திருந்தான்.

இறுதியில் இருந்த குறிப்பைப் படித்தவுடன் அவருக்கு அந்த அளவுக்காவது தன் நண்பனை விழிக்கச் செய்யப் பயன்பட்டதே தன் கடன் என்ற திருப்தியில் 'பிறரின் துன்பம் மற்றவருக்குப் பாடமாகிறது' என்பது உண்மைதான். என்வரையில் திருமணம் என்பது மணவிலங்காயிற்று என்றாலும், திருமணத்தைத் திருமணமாகவே கண்ட அவர்கள் வாழட்டும்! நீடூழிகாலம் வாழட்டும்! என்று வாழ்த்தியபடியே அவர்கட்கு வாழ்த்து முடங்கல் வரையமுற்பட்டார்.

✻

"இலட்சியக் கனவு"

—[ஈழம். மார. தமிழ்ச்செல்வன்]—

பால்வண்ண நிலவு-எண்ணத்திற்கேற்ப இதமாக வீசும் இளம் தென்றல் — பொன்னியாற்றின் பொங்கிவரும் புதுப்புனல் — தெம்பாங்கு பாடுவது போன்ற அதன் இனிய சலசலப்பு ஒலி; இத்தனையும் இதயத்திற்கு இதமாக இருந்தன. இதனால் இன்பம் பொங்கும் இதயம் இறும்பூதெய்த, அதனைச் சுவைத்தவாறு காவிரிக்கரையில் நின்றுகொண்டிருந்தான் பால்வண்ணன்.

அவன் ஒரு இளம் கவிஞன். பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஒரு தனித்தன்மையைக் காணும் புரட்சிக்கவி. புத்தம்புதுக் கருத்துக்களால் புத்துலகை உருவாக்கப் பாடுபடும் பாவலன். திருந்திய சமுதாயத்தைச் சமைக்க விழைவு கொண்டுள்ள செம்மல்! எழுச்சிமிகு எண்ணங்கள் கொண்டவன். வண்ணக்காவியங்கள் பல வடித்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்தவன். திண்ணிய உள்ள உரம் படைத்தவன். அறவாளி! அறிஞனும் கூட.

காவிரியாற்றின் பொலிவையும் வலிவையும் கண்டுகளித்துக் கொண்டிருந்தவன் கருத்திலே, கற்பனை பொங்கி வழிந்துகொண்டிருந்தது காட்டாற்று வெள்ளம்போல். கற்பனை எழிச்சியுற்றது. வளர்ந்து வடிவமும் பெற்றது. துடித்த இதழ்கள் அசைவுபெற்றன. இதயத்தின் அடித்தளத்திலிருந்து புரட்சிக் கருத்துக்கள் புதுமெருகுடன் உருப்பெற்றன.

"காவிரியே! என்னே உன் பெருமை! கட்டாந்தரைகளெல்லாம் உன் கடைக்கண்பார்வைபட்டுக் கழனிகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. பொன்னியே! உன் புதுப்புனல் என்னை மட்டும் பூரிப்பிலாழ்த்திப் புளகாங்கிதமடையச் செய்யவில்லை. இத்தென்புலத்து மண்ணையே பொன்விளையும் பூமியாக்கிவிட்டது. அதுகண்டு, என்னகம் குளிர்கிறது. இம் மண்மாதா மனம் பூரிக்கிருள்.

"வளவன்கொண்ட வளநதியே! உன் வனப்பை என்னென்பேன்! உன் புகழ்பாட எனக்கேதுஆற்றல்? ஒரு இளங்கோ இருக்கவேண்டும். இல்லையேல் இன்னொரு புகழேந்தியாவது பிறக்கவேண்டும். அப்போதுதான்—இல்லை! அவர்களால்தான் உன் புகழ் பாடமுடியும். நற்றமிழ் நாவலன் நக்கீரர் வந்தால்தான் நாநிலமறியும் உன் பெருமையை. செயங்கொண்டார் ஒருவரால்தான் உன் பெருமை குறித்து ஒரு பரணியே பாடமுடியும். அவர்களெல்லாம் சேர்ந்து செய்துமுடிக்கவேண்டிய செயலை இந்த இளம் கவிஞனல் மட்டும் எப்படிச் சாதிக்கமுடியும்? காவியப் பெருங்கடலில் நானொரு சிறு துரும்பன்ருே?" இப்படியே அவன் உள்ளம் அள்ள அள்ளக் குறையாத ஊற்றுக்கேணியாகக் கருத்துப் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது.

ஒருகணம்ஓய்வெடுத்துக்கொள்ள விழைந்தான்போலும். ஆனல், கவியுள்ளம் எல்லையில்லா நீள்கடல் போல் நீண்டுகொண்டே இருந்தது.

பாரினிலே இன்று சீர்கெட்டுக் கிடக்கும் பழந்தமிழர் சமுதாயத்தின் சாக்கடைப் போக்கினைச் சிறிது சிந்தித்துப் பார்த்தான். நெஞ்சம் நெருப்பாகியது-இதயம் கனலாகத் தகித்தது—உள்ளம் எரிமலையாகக் குமுறியது. கொதித்தெழுந்தான். வார்த்தைகள் வெடித்தன.

"சோணாட்டுப் பேராறே! உன் பெருமைதனைப் பாரெல்லாம் பரப்ப அன்று பரணி பாடிச் சென்று சிறப்பித்த செந்தமிழர்கள்தான் இன்று சீரழிந்து—சிறப்புக்கெட்டு—சித்தம் கலங்கிய பித்தர்களாய் இத்தரையில் வதைகின்ருர்கள். மறமற்று, மாண்பிழந்து மாக்களாய் நடமாடுகின்ருர்கள், பலர் அடிபணிய அரசோச்சிய அவர்கள் வேற்றுக்கருத்துக்களால் பிளவுபட்டு மாற்ருருக்குக் குற்றவேல் செய்பவர்களாக இக்குவலயத்திலிருக்கின்ருர்கள்.

"தமிழைப் பழித்தோரை தாய் தடுத்தாலும் விடேன்" என்று சிறுத்தைபோல் சீறிப்பாய்ந்தவர்கள், இன்று பழித்துரைத்தோரையும் இழித்துரைத்தோரையும் வாழவிட்டுக்கொண்டு மானமிழந்து — மரியாதை கெட்டு ஈனர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகி இம் மாநிலத்தில் வாழ்கின்ருர்கள். இதை நினைக்கும் பொழுதுதான் நெஞ்சமே துஞ்சிவிடும்போலிருக்கிறது. அஞ்சுவதால் ஏற்பட்டதல்ல. அவனியில் நம்மவருக்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலையை நினைக்குந்தோறும் என் நெஞ்சம் துஞ்சித் துஞ்சி மீழ்கிறது. என் செய்வேன்?"

ஆர்த்தெழும் அலைகடலுக்கும் சற்று அமைதி தேவை அல்லவா? தகித்துக்கொண்டிருந்த அவன் இதயமும் சற்றுத் தணிய விழைவு கொண்டதுபோலும்! ஒரு நீண்ட நெட்டுயிர்ப்புடன் பேசிக்கொண்டிருந்தவன் தன் பேச்சை நிறுத்தினன். அடுத்த விநாடி... 'அத்தான்' என்ற சத்தான மொழி யாழினும் இனிமையாகக் கேட்டது. திகைப்போடு வியப்பும் விழிகளில் விளங்க, அம்மொழிவந்த திக்கு நோக்கித் திரும்பினன். அங்கே...

அவள் நின்றுகொண்டிருந்தாள், அவன் சொத்தாகப்போகும் அத்தை மகள் முத்துவடிவு. நோக்கினன். நின்றிருந்த அந்தச் செந்தாமரைக் கண்ணளோ சிரிக்கும் முல்லையென முறுவல் தவழும் முகத்தினளாய் அன்னநடை பயின்ருள் அவனை நாடி. உள்ளத்தால் கொண்டவனைக் கண்கள் கண்டதும் களிப்புற்றன.

சற்றுமுன் புரட்சிப் புலவனக இருந்தவன், இப்பொழுது காதற் கவியானன்.அவளும் தமிழ்த்தாயின் மடியில் தவழ்ந்த தமிழ்மகள்தானே? விட்டுக்கொடுப்பாளா? இருவரும் காதலின்ப உலகத்திலே கானம்பாடி வானம்பாடிகளாய் வட்டமிட்டுத் திரிந்தனர்.

"அத்தான்!"

"உம்."

"இப்பொழுது நாம் எங்கிருக்கிருேம்?"

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"வள்ளுவனர் செய்குறளுக்கு வடிவம் அமைத்துக்கொண்டிருக்கிருேம் வண்ணமயிலே."

"என் எண்ணமெல்லாம் இன்பத்துப்பாலோடு இரண்டறக் கலந்துவிட்டது."

"இன்பமே! உண்மையும் அதுதான். குறளின் இன்பத்துப் பாலை நீயெனக்கு எடுத்துக்காட்டிவிட்டாய்."

"அகத்தை எனக்கு அறிவுறுத்திவிட்டீர்களத்தான்."

"அதன் அருகே புறம் இருப்பதையும் நினைவூட்டிவிட்டாய்."

"நீங்கள் புறம்சென்றுவிட்டால் நான் மணிமேகலையாக மாறிவிடுவேன்."

"அதுதான் முடியாது"

"ஏன்?"

"இப்பொழுதுதானே நாம் சிலப்பதிகாரத்தில் சிந்துபாடிக்கொண்டிருக்கிருேம்."

"இல்லை! வளையாபதியில் விளையாடுகிருேம்."

"ஊஹும். குண்டலகேசியில் குலாவிக்கொண்டிருக்கிருேம்."

இனி, வா வா கலிங்கத்துப்பரணியைக் கண்டுவருவோம்."

"முடியாது."

"என்ன!"

"கலித்தொகையைக் கண்டபின் தான் வருவேன்."

"தேனமுதே! நற்றிணையை நாடியதும் முல்லைத் திணையில் மூழ்கிக் கிடந்ததையே மறந்துவிட்டாயே?"

"மறப்பேனு அத்தான், அங்கு கிடைத்த முத்தங்களை."

"அத்தனையும்..."

"நாம் குறுஞ்சிக் கலியில் கொண்ட முறுவலின் முத்தாய்ப்புகள்தானே?"

"சரி, வாருங்கள் நெடுந்தொகைக்குப் போகலாம்."

"சிறுபாணுற்றுப்படைக்குப் போகும் வழியில்தானே? உம்...... முத்துவடிவு......"

"என்னத்தான்?"

"இத்தனைக்கும் மத்தியிலே இரும்பல்காஞ்சி மட்டும் இருந்திருந்தால்... ...?"

"என்னத்தான் சொல்கின்றீர்கள்?"

"சொல்ல என்ன இருக்கிறது கண்ணே? நம் சொத்துக்கள் செந்தமிழ்ச் செல்வங்கள் அன்றெரு நாள் ஏற்பட்ட கடலரிப்பில் எத்தனையோ அழிந்துபட்டன. சுமார் எண்ணுயிரம் சுவடிகளுக்கு மேலிருக்கலாம். அத்துணையிலும் தலையானது இரும்பல்காஞ்சி முத்துவடிவு, இரும்பல் காஞ்சி."

"அப்படி என்ருல்......?"

"அகத்தையும் புறத்தையும் தன்னகத்தே ஒருங்கே கொண்டுள்ள அரும்பெரும் களஞ்சியம்: நமக்குக் கிடைத்திருந்த விலைமதிப்பில்லாக் கருவூலம்!"

"நீங்கள் எனக்குக் கிடைத்ததைப்போல"

"குறும்புக்காரி!"

"வேண்டாம். நேரமாகிவிட்டது. வீட்டில் யாராவது விழித்துக் கொண்டுவிட்டால் விபரீதம் விளையும்."

"உண்மைதான். அலைகடல்போல் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கும் நம் காதல் வெள்ளத்திற்கும் அணை போட முயல்கின்றனர் சில அறிவிலிகள்."

அவன் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் "முத்து" என்ற முரட்டுக் குரல் கேட்டு இருவருமே தீயைத் தீண்டியவர்கள்போல் திடுக்கிட்டுப் பிரிந்து நின்றனர்.

அவ்விருவரின் நிலைகண்ட மருதப்பர் திடீரென்று பேசினுர்.

"மக்களைப் பெற்றவர்களே! பருவப் பெண்களின் தந்தையர்களே! மகளின் மனம் நாடிய மணவாளனெருவனுக்கே மணமுடித்து ஒரு தந்தை மகிழாதுபோனுல், என் கதிதான் உங்களுக்கும் ஏற்படும். அவர்களும் இப்படித்தான் பரிதாபகரமாகச் சாக நேரிடும். அவர்களெல்லாம் சாக்காடு நோக்கிவிட்டால் செத்து மடிந்துவிடும் மனித குலம். மாண்புடை மாதர் குலம் அழிந்தே போய்விடும். அவர்கள் அழிந்துவிட்டால் வாழ்வேது வருங்கால மனித சமுதாயத்திற்கு? அதனுல்தான் உங்களை எல்லாம் வேண்டுகிறேன். இணைந்துவிட்ட இரு இளம் உள்ளங்களை ஏற்றத்தாழ்வை எண்ணி இரு கூருக்காதீர்கள். பகையை நினைத்து, பாசத்தால் பிணைந்தோரைப் பிரிக்காதீர்கள். கணவன் மனைவியாக வேண்டிய ஒன்றுபட்ட உள்ளங்களை—கருத்தொருமித்த காதலரை உருத்தெரியாமலாக்காதீர்கள். அவர்தம் நேசத்தை நாசமாக்காதீர்கள். ஒட்டிவிட்ட உள்ளங்களை வெட்டிப் பிரிக்காதீர்கள். பிரித்தால்...? என்னைப் போல்தான் நீங்களும் பிள்ளைகளை இழந்து பித்தர்களாய்த் திரிவீர்கள். நாடே நாசமாகிவிடும்.

அதனுல்தான் சொல்கிறேன். காதல் மணம் செய்வியுங்கள். பெற்ற பிள்ளைகள் பேருவகையுடன் வாழ ஒருமனப்பட்ட திருமணங்கள் நடாத்துங்கள். அப்பொழுதுதான் உங்கள் மக்கள் வாழ்வு மணக்கும்—வளமுள்ளதாக இருக்கும். எல்லோரும் ஓரினம். எல்லோரும் ஓர் நாட்டு மக்கள் என்ற சமத்துவம் நிலவும். பகையும் போட்டியும் பூசல்களும் இருக்காது. அன்பும் பண்பும் அரசோச்சும். நம் மூதாதையர்கள் கண்ட "இலட்சியக் கனவு" ஈடேறும். ஆமாம்! அவர்கள் கண்ட "இலட்சியக் கனவு" நனவாகும். அதை நிறைவேற்றிய பெருமை நம்மைச் சாரும். இதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. மார்பை அழுத்திப் பிடித்தவாறு "ஆ...முத்து ......வ...டி...வு......" என்று தடுமாறினுர். அடியற்ற மரம்போல் அவர்கள் பாதத்தில் விழுந்தார்.

இப்பொழுது அங்கே காதல் பண் பாடவில்லை. கவிஞனின் கருத்துக்கள் கேட்கவில்லை. காரிகையின் கனிமொழிகள் ஒலிக்கவில்லை. மருதப்பரின் மனக்குமுறலும் ஓய்ந்துவிட்டது. ஆனுல், அன்றுபோல் இன்றும் பொன்னியாற்றின் நீரோட்ட ஒலிமட்டும் கேட்டுக்கொண்டே இருந்தது. இயற்கையின் இயல்பு எப்போதும் இப்படித்தான் இருக்கும் என்பதைப் போலிருந்தது. ஆனுல், மருதப்பரது மனக்குமுறல் மட்டுமல்ல, நம் மூதாதையரின் "இலட்சியக் கனவு"...என்றுதான் நனவாகுமோ? ❁

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.